★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK


2023 மே 1 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 101 | Monday 01, May, 2023 | 12பக்கங்கள் | 50/-

## நாட்டில் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரிப்பு

### இவ்வருடம் 2,500 பேர் பாதிப்பு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 2,500 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதக பதிவாகியுள்ளதாக தொற்றுநோயியல் பணியகம் தெரிவித்துள்ளது. இரத்தினபுரி, காலி மற்றும் கேகாலை மாவட்டங்களில் 04

## நாட்டை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல கைகோர்ப்போம்

### ஜனாதிபதி மே தின வாழ்த்து



உழைக்கும் மக்களே நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார செயல்முறையிலும் வலுவான செல்வாக்கை செலுத்தக்கூடிய சமூக சக்தியாக உள்ளனர். வரலாறு நெடுகிலும் நாம் எதிர்கொண்ட மற்றும் வெற்றிகொண்ட சவால்கள் ஏராளம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு உழைக்கும் மக்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு மே தினத்தை கொண்டாடும் நேரத்தில், நாடு மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியில் 04

## உழைக்கும் மக்களின் உரிமைகளை மதிப்போம்

### பிரதமர் தினேஷ் மேதின வாழ்த்து



எந்தவொரு உடன்படிக்கை மூலமும் உழைக்கும் மக்களின் உரிமையை உதாசீனப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தமது மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அரசு, ஊழியர்கள், தொழில் வழங்குனர் ஆகிய முத்தரப்பினரால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் அடிப்படையில். தொடர்ந்தும் எதிர்காலத்தில் பயணிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் மே தினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 04

## அநுராதபுரம் - காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை 2 மாதங்களுக்குள் மீள ஆரம்பம்

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இரண்டு மாதங்களுக்குள் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அநுராதபுரம் பிரதேசத்தில் 04

# இன்று மே தினம்;

# பிரதான கட்சிகளின் கூட்டங்கள் கொழும்பில்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய மக்கள் சபை கண்டியில்

## மலையகத்திலும் வடக்கு, கிழக்கிலும் பல மேதினக் கூட்டங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

137வது தொழிலாளர் தினத்தை இம்முறை பெருமையுடன் கொண்டாடுவதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் திட்டமிட்டுள்ளன. அந்தவகையில் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் கொழும்பில் இன்று நடைபெறுவதுடன் மற்றுமொரு முக்கிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதன் மே தினக் கூட்டத்தை கண்டியில் நடத்தவுள்ளது.

அத்துடன், ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் உத்தர லங்கா பெரமுன, முற்போக்கு ஜனநாயக கட்சி ஆகியவையும் கொழும்பில் மே தினக் கூட்டங்களை நடத்தவுள்ளதுடன் சுதந்திர மக்கள் சபை அதன் மே தினக் கூட்டத்தை கண்டியில் நடத்தவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியானது '2048 வெற்றிபெறுவோம்' என்ற தொனிப் பொருளில் அதன் மே தினக் கூட்டத்தை கட்சியுடன் இணைந்துள்ள அனைத்து அமைப்புக்கள் மற்றும் சங்கங்களுடன் இணைந்து கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இன்று காலை 9.00 மணிக்கு நடத்தவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சி முன்னாள் ஜனாதிபதி 04

## தொழிலாளர்களது உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மே தினச் செய்தி!



உலகெங்கிலும் உள்ள உழைக்கும் மக்கள் தங்கள் பாரம்பரியங்கள், வரலாறுகள் மற்றும் சாதனைகளை ஒவ்வொரு ஆண்டும் இன்றைய தினமான மே 1 ஆம் திகதி கொண்டாடுகிறார்கள்.

1886 ஆம் ஆண்டு எட்டு மணி நேர வேலை நாள் கோரி தங்கள் உயிரை தியாகம் செய்த சிக்காகோ நகர தொழிலாளர்களின் வரலாற்றுப் போராட்டத்தின் நினைவாக சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவதோடு, அந்த வரலாற்று சிறப்புமிக்க நாளை இலங்கை உழைக்கும் மக்களும் நினைவுகூருகிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் 04

## அரகலயவின் பின்னணியில் யார் யார் இருந்தார்கள்?

### கண்டறிய அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு தேவை



அரகலயவின் போது இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் முழு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து விசாரணை நடத்த வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார் .

இது தொடர்பில் ஆளும் தரப்பு ஏற்கனவே ஜனாதிபதியிடம் முறையான கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அதற்கு ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்குவார் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 04

## 3ஆவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் ஜனாதிபதி

### உத்தியோகபூர்வ அழைப்பின்பேரில் பங்கேற்பு



3ஆவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ள நிலையில், இதில் பங்கேற்பதற்காக உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை பிரித்தானியா செல்கிறார்.

சுமார் 70 ஆண்டுகாலம் ஐக்கிய இராச்சியத்தின் அரியணையை அலங்கரித்த 2ஆம் எலிசபெத் மகாராணி கடந்த ஆண்டு செப்டெம்பர் 04

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை

## இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் அதிக வருமானம்

### மத்திய வங்கி தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் வெளிநாட்டில் வேலைவாய்ப்பில் ஈடுபடுவோர் மூலம் கிடைத்துள்ள அன்னியசெலாவணி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானம் குறிப்பிட்டளவு அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் மத்திய வங்கி தெரிவிக்கையில் இந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் வெளிநாட்டில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ளோர் மூலம் 568 மில்லியன் டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 04




செயற்றிறன் முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் முறை

## அமைச்சு - இராஜாங்க அமைச்சு செயலாளர்களுக்கு புள்ளிகள்

### 50க்கும் குறைவாக பெற்றால் நடவடிக்கை



அமைச்சுகள் மற்றும் இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்களினது செயல்திறனின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து காலாண்டுக்கு ஒருமுறை மாற்றங்களைச் செய்யும் நோக்கத்துடன் அவர்களுக்கு புள்ளி வழங்கும் முறைமையொன்றை அடுத்த மாதம் முதல் அறிமுகப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த மதிப்பீட்டு திட்டத்தின் கீழ், வேலைத்திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் 04

## சம்பளம் கிடைக்கவில்லை என்றால் அறிவியுங்கள் !

### இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர



உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் கிடைக்காவிடில் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அரச உத்தியோகத்தர்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் அடிப்படை சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அவர்கள் முறையாக சம்பளம் பெறுவதில்லை என தகவல் 04



## மக்களது ஆணையுடன் மீண்டும் ராஜபக்ஷவினர் ஆட்சிபீடமேறுவர்

SLPP பொதுச் செயலாளர் சாகர காரியவசம் 03



## இந்திய முட்டைகள் சில்லறை சந்தை விற்பனைக்கு அனுமதி

03

## ஆலயத்தினுள் மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

### வவுனியா, மருதங்குளத்தில் சம்பவம்



வவுனியா, எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் வெள்ளிக்கிழமை (28) உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஆலயத்தின் உற்சவ பூஜைக்காக குறித்த இளைஞர் 04

## கொரோனா தொற்றால் மேலும் இருவர் உயிரிழப்பு

### மாத்தறை, எட்டியாந்தோட்டையில் பதிவு



கொரோனா வைரஸ் தீவிரமடைந்து இரண்டு நாட்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக கொலன்னாவ மரண விசாரணை அதிகாரி காஞ்சனா விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஹமந்துவ பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய பெண் ஒருவரும், யட்டியந்தோட்டை பனாவத்தையில் வசிக்கும் 73 வயதுடைய ஆணும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த பெண் கடந்த 27ஆம் திகதி IDH 04

## நாட்டை கட்டியெழுப்ப IMF உதவிகள் அவசியம்

### இல்லையேல் கடினம் என்கிறார் மைத்திரி



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின்றி நாட்டைக் கட்டியெழுப்புவது மிகக் கடினமாகும். நான் பாராளுமன்றத்துக்குச் சென்றிருந்தால் நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்திருப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக பொலன்னறுவையில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டமையின் காரணமாகவே வாக்களிப்பில் கலந்து கொள்ள 04

## மே தினத்தையொட்டி இன்று பலத்த பாதுகாப்பு

### 3500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில்; பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மே தினத்திற்காக இன்று நடைபெறவுள்ள கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை கவனத்திற்கொண்டு போதியளவு பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதுதொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில், கொழும்பு நகரில் இன்று இடம்பெறவுள்ள மே தினக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் தொடர்பில் அதிக கவனம் 04

# நகர்வலம்



## வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நபர் வெட்டிக் கொலை

### அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சம்பவம்

**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பேராசிரியர் பிரிவிலுள்ள வாட்டில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் ஒருவன் கூரிய ஆயுதமொன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை 28 ஆம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர். மன்னார் வீதி, மதவாச்சி பகுதியை வசிப்பிடமாக கொண்ட 24 வயதுடைய இளைஞனொருவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, மதவாச்சி பகுதியில் இருதரப்பினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்காகவேண்டி அநுராதபுரம் வலயத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த புஷ்பகுமாரவின் ஆலோசனையில் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## நெருக்கடியான சூழ்நிலையை வெற்றி கொள்ள அரசியல் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவது அவசியம்

### அமைச்சர் நஸீர் அகமட்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பில் விரிவான அரசியல் ஒருமைப்பாட்டுடன் அனைவரும் செயற்படுவது அவசியம் என அமைச்சர் நஸீர் அகமட் தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இந்த விடயங்களில் இணைந்து செயற்படுவது அவசியம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,



நாட்டின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நாம் முக்கிய திருப்புமுனைகளை சந்தித்துள்ளோம். அந்த வகையில் சுனாமியின் பின்னர் ஏற்பட்ட திருப்புமுனை மற்றும் 2009 யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஏற்பட்ட திருப்புமுனை ஆகியவற்றை குறிப்பிட முடியும்.

அதேபோன்று தற்போது இந்த கஷ்டமான சூழ்நிலையை நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வது அவசியம். மிக கஷ்டமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும் எமது எதிர்கால சந்ததியினர் தொடர்பில் சிந்தித்து நாம் ஒருமைப்பாட்டுடன் செயற்படுவது அவசியமாகும்.

இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் பாரிய பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ளார். அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டுள்ள இந்த தருணத்தில் தான் எமக்கு சவால் நிறைந்த காலம் ஆரம்பித்துள்ளது. பெற்றுக் கொள்ளும் கடன்களை முறையாக பயன்படுத்தினால் மாத்திரமே பொருளாதார நிலையில் இருந்து எமது நாட்டை மீட்க முடியும்.

சர்வதேச நாணயம் தொடர்பில் பல்வேறு எதிர் கருத்துக்கள் நம்மிடையே காணப்பட்டாலும் எமக்கான தீர்வு அதுவாகவே காணப்படுகிறது.

அத்துடன் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மக்களுக்கு தெளிவில்லாத நிலையே காணப்படுகின்றது. அதனை அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியதும் அவசியமாகிறது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச நாணய நிதியம்; நிபந்தனைகளன்றி வழிகாட்டல்களையே வழங்கியுள்ளது

### இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியம் மூலம் விடுக்கப்பட்டுள்ளது நிபந்தனைகள் அல்ல, அது எமக்கான வழிகாட்டல்களே என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் என்பது எமது நாட்டை விழுங்க வந்துள்ள அரக்கன் என்பதாகவே கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள்.

அவ்வாறானவர்கள் சர்வதேச நாணய நிதியத்தில் 190 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளதை தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

உலகின் பல்வேறு நாடுகளும் கடன் பெறுகின்றன. இந்தியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளும் கடன் பெறுகின்றன. கடன் பெற்றுக் கொள்வதைப் போன்றே முறையாக அவற்றை மீள செலுத்துகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதித்துடனான உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி ஆற்றிய உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்;

சர்வதேச ரீதியில் பல்வேறு நாடுகளும் கடன்கள் பெறுவது இயல்பே. எமது நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்ததால் கடனை மீள செலுத்த முடியாத நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அத்துடன் எமது வெளிநாட்டு அந்நிய செலாவணி குறைவடைந்ததால் பொருட்களை இறக்குமதி செய்வதிலும் சிக்கல்கள் ஏற்பட்டன. அதனால் நாட்டில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது அவ்வாறு பாதிப்பு ஏற்பட்டது என்பதால் அதனை சொல்லி சொல்லியே காலத்தை கடத்த வேண்டிய அவசியமில்லை.

அதனை விடுத்து புதிய பிரவேசத்தின் மூலம் எமது நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவப்படுத்துவதே முக்கியமாகிறது. அதன் மூலமே சிறந்த பாதையில் நாட்டை முன்னெடுத்து செல்ல முடியும்.

அந்த வகையில் ஜனாதிபதி தற்போது நிதியமைச்சராக தெளிவான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளார்.

ஒருபுறம் சர்வதேச நாணய நிதியம் சென்று அதன் மூலம் எமது பொருளாதாரத்தை நிலை நாட்டுவதற்கு வழி வகுத்துள்ளார்.

அதேபோன்று எமது நாட்டின் செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் அது இடம்பெற வேண்டும். அதனை நாம் அனைவருமே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேபோன்று உற்சவங்கள் உள்ளிட்ட பல்வேறு செலவுகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வீதியோரம் கவனிப்பாரற்று கிடந்த கைப்பையில் ரூபா ஒரு இலட்சம்

### உரிமையாளரிடம் ஒப்படைத்த சிறுமிக்கு பாராட்டு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வீதியோரமாக விழுந்திருந்த ஒரு இலட்சம் ரூபா பணப்பையை சிறுமியொருவர் கண்டெடுத்து உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ள சம்பவமொன்று இராஜாங்கனை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராஜாங்கனை ஸ்ரீமாபுர மகா வித்தியாலயத்தில் தரம் 8 ல் கல்வி பயிலும் குறித்த சிறுமி அருகிலுள்ள தனது நண்பியின் வீட்டில் விளையாடிவிட்டு வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது வீதியோரத்தில் கைப்பை ஒன்றை கண்டெடுத்துள்ளார்.

வெற்று கைப்பையாக இருக்கலாம் என நினைத்து அந்த சிறுமி அதனை திறந்து பார்த்த போது அதில் பணத்தாள்கள் இருப்பதை கண்டு அதனை உரிமையாளரிடம் ஒப்படைப்பதற்கு உதவுமாறு தனது நண்பியின் தாயாரிடம் கூறியுள்ளார். ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் பிரதேச அதிகாரிகளின் முன்னிலையில் கைப்பை உரிமையாளரான பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த சிறுமியின் நற்செயலை பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



ஹெம்மாதகம பள்ளிப்போருவ முஸ்லீம் வித்தியாலய மாணவன் எம். என். நாமிக் 157 புள்ளிகளை பெற்று 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர், பள்ளிப்போருவை எம். இசட்.எம். நஸீம், எம்.எச்.எஸ். சுரூரியா (ஆசிரியை) தம்பதியரின் புதல்வராவார்.

## அநுராதபுரம் மாவட்ட டிப்போக்களுக்கு 25 பஸ் வண்டிகள் பகிர்ந்தளிப்பு



**அநுராதபுரம் மேற்கு தினகரன், மாவட்ட குறூப் நிருபர்கள்**

இந்திய உதவித் திட்டத்தின் கீழ் எமது நாட்டிற்கு வழங்கப்பட்ட 500 பஸ்களில் 25 பஸ்களை அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் டிப்போக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (29ஆம் திகதி) அநுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரக்கோன் உட்பட பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



அநுராதபுரம், கெப்பித்திகொள்ளாவ, ஹொரவ்பொத்தான, கெக்கிராவ ஆகிய பஸ் டிப்போக்களுக்கே இந்த 25 பஸ் வண்டிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. கிராமப்புறங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினையை தீர்க்கும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட்ட 25 பஸ் வண்டிகளும் கிராமப்புற பாதைகளிலேயே சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மா. கணபதிப்பிள்ளை தலைமையில் இம்மாதம் 03ம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “மலையகத் தொழிலாளர்களும் போராட்டங்களும்” என்னும் தலைப்பில் சமூக செயற்பாட்டாளர் வணபிதா. சக்திவேல் அடிகள் உரை நிகழ்த்தவுள்ளார்.



பேருவளை மருதானை பாஸியதுந் நஸ்ரியா பெண்கள் மகளிர் கல்லூரியில் புதிய கல்வியாண்டின் 1ஆம் வருடத்திற்கான மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு (25) பாடசாலை முன்றலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. கல்லூரி அதிபர் ஜனாபா எம்.எம். எம். மஸ்னவியா ரிப்கான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இரண்டாம் வகுப்பு மாணவிகள் மலர்கொத்து மற்றும் இனிப்புப் பண்டங்கள் வழங்கி மகிழ்ச்சியோடு வரவேற்றமை விசேட அம்சமாகும்.

## பேருவளை அல்–ஹுமைஸராவில் புது மாணவர்கள் வரவேற்பு நிகழ்வு

பேருவளை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் தரம் 01க்கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா கடந்த செவ்வாய்க்கிழமை (25) பாடசாலை வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

"செயற்பாட்டு அடிப்படையிலான வாய் மொழி மூல ஆங்கிலம்" எனும் தொனிப்பொருளில் பாடசாலையின் அதிபர் எம்.எல்.லியாஸ்டீன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், அஷ்ஷெய்க் பஹ்ரி அனஸ் (நளீமி) பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். மேலும் பாடசாலையின் உதவி அதிபரும் ஆரம்ப பிரிவு வலய அதிபருமான ஏ.டி.எம். நைஸர், ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







இந்நிகழ்வில், புதிதாக அனுமதி பெற்ற தரம் 1 மாணவர்கள் பேண்ட் வாத்திய குழுவினால் வரவேற்கப்பட்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மே 1 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
சுபஹ் - 04.38
லுஹர் - 12.09
அஸர் - 03.26
மஃரிப் - 06.19
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் சித்திரை 18
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# உழைப்பவர் வாழ்வு விடியவும், சகலரும் சமவுரிமை பெற்று நிமிரவும், உறுதியுடன் உழைப்போம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேதின செய்தி



உழைக்கும் மக்களின் வாழ்வில் நிரந்தர விடியல் பிறக்கவும், சகல இன, மத, சமூக மக்களும் சமவுரிமை பெற்ற நிமிர்காலம் நிலைக்கவும் தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில்அமைச்சருமானடக்ளஸ் தேவானந்தா தனது மேதின செய்தியில் தெரிவித்துள்ளார். அந்த செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது "உலகத்தொழிலாளர்களே, ஒடுக்கப்படுகின்ற தேச மக்களே,.. ஒன்றுபடுங்கள் என்ற மேதின அறை கூவலை ஏற்று, நாமும் அன்று எமது தேச விடுதலை போராட்டத்தின் வழி நின்று உழைக்கும் மக்களின் உரிமைக்காகவும் எழுச்சி கொண்டவர்கள். எவரும் எவரையும் அடிமை என்று கொள்ளாத சமத்துவ தேசத்தை வென்றிட புரட்சிகர இலட்சியக் கனவோடு நாம் நீதியான போராட்டக்களத்தில் நின்றவர்கள். நீதியான எமது உரிமைப்போராட்டம் சகோதர இயக்கங்கள் மீதான மேலாதிக்க வன்முறைகளாலும், நாம் வெறுக்கும் உள்ளியக்க படுகொலைகளாலும், அநீதியான அழிவு யுத்தமாக மாறிய போது,.. தீர்க்கதரிசனமாக எமது இலட்சிய பாதையை நாம் மாற்றியவர்கள். ஆனாலும் பயணத்தை நிறுத்தவில்லை,.. எந்த இலட்சிய கனவுகளுக்காக நாம் அன்று போராட எழுந்தோமா அதே இலட்சிய கனவுகளுடனே நாம் வகுத்த தேசிய நல்லிணக்க பாதையிலும் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம், எமக்கு கிடைத்த அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் முடிந்தளவு எமது மக்களுக்கான வெற்றிகளையும் அடைந்து வருகின்றோம். அரசியலில் சுதந்திரம், பொருளாதாரத்தில் சமத்துவம், சமூகத்தில் சகோதரத்துவம், இத்தகைய நாகரீக தேசத்தை உருவாக்கவே நாம் நடைமுறையில் உழைத்து வருகின்றோம். உழைக்கும் மக்களின் பெயராலும், தமிழ் தேசிய இனத்தின் பெயராலும்,.. வெறுமனே கூச்சலிடுவதால் எந்த கோட்டையின் கதவுகளும் திறக்காது.

இன, மத, சமூக முரண்பாடுகளை வெறுமனே அறிக்கையிட்டு அதில் குளிர் காய்ந்து அர்த்தமற்ற அரசியல் நடத்துவதால், இருப்பதை விடவும் எல்லா பிரச்சினைகளும் கொழுத்து கூர்மையடையுமே தவிர நீதி ஒருபோதும் கிடைக்காது. அதற்காக, எவரும் எவரிடமும் சரணாகதி அடைவதென்றோ, சமத்துவ உரிமையற்ற சமரசங்களுக்கு செல்வதென்றோ அர்த்தமல்ல... கால மாற்றமும், சூழல் மாற்றமும், எமக்கு புதிய அனுபவங்களை கற்றுத்தந்திருக்கிறது. அரசியல் அதிகாரங்களை வென்றெடுப்பதன் ஊடாக உழைக்கும் மக்களோ, அன்றி எமது இன, மத, சமூக மக்களோ எவரிடமும் கையேந்தி வாழாத காலச்சூழலை நாம் படிப்படியாக உருவாக்கவே உழைத்து வருகின்றோம். அரசியல் பலம் போதிய அளவு எமக்கு கிடைதிருந்தால் எமது மண்ணில் இன்னமும் அதிக மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். நீரில் வாழும் மீன்களைப் போல் நாமே என்றும் மக்கள் மத்தியில் நீங்காதிருப்பவர்கள். மக்களின் பிரச்சினைகள் சகலதையும் ஆழ்மன உணர்வுகளில் நாமே ஏந்தியிருப்பவர்கள். உழைப்பவர் இடர் தீர, வறியோர் வாழ்வுயர, நிலமற்றோர், வீடற்றோர் நிலை மாற, சமூக சமத்துவ நீதி நிலவ, பெண்களின் சமவுரிமை வெல்ல, வேலையற்ற இளைஞர் யுவதிகளின் தேவைகள் நிறைவேற, எல்லோரும் எல்லாமும் பெற்று சரிநிகர் சமனென்ற நிமிர் வாழ்வு மலர, தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம். அன்றாட தேவைகளின் தீர்விற்கும். அபிவிருத்தியில் தமிழ் தேசத்தின் மலர்ச்சிக்கும், அரசியலுரிமையில் எம் மக்களின் நிரந்தர மகிழ்ச்சிக்கும், தேசிய நல்லிணக்க வழி நின்று தொடர்ந்தும் செல்வோம். நாம் செல்லும் பயணம் வெல்லும்! தமிழ், முஸ்லிம், சிங்கள உழைப்பவர் ஒற்றுமை ஓங்கட்டும் உழைக்கும் மக்களின் உரிமைகள் வெல்லட்டும்! தமிழ் பேசுவோர் தேசம் தலை நிமிரட்டும்!! இன மத சமூக சமத்துவ நீதி நிலவட்டும்!!!" இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

# "Women Plus Bazaar 2023" கண்காட்சி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்



இலங்கைப் பெண்களை வலுவூட்டும் நோக்கில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட "Women Plus Bazaar 2023" கண்காட்சி நேற்று (30) காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பு சங்ரில்லா ஹோட்டலில் ஆரம்பமானது.

கொழும்பில் உள்ள எகிப்து அரபுக் குடியரசு தூதரகம், கொழும்பு மாநகர சபை மற்றும் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவை ஆகியவை இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

உள்ளூர் கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் பெண் தொழில்முனைவோரின் 200இற்கும் மேற்பட்ட கண்காட்சிக் கூடங்களைக் கொண்டிருந்ததோடு, பெண் தொழில்முனைவோருக்கு கூடுதல் வாய்ப்புகளை வழங்கி அவர்களின் அதிக பங்களிப்பைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது சிறப்பு அம்சமாகும்.

கண்காட்சியை பார்வையிட்ட ஜனாதிபதி, உற்பத்தியாளர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடலில் ஈடுபட்டார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கு உள்நாட்டு கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக காலி பிரதேசத்தில் வர்த்தக நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான இடமொன்றை தேடித் தருமாறு பெண்கள், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவிடம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் சம்பத் அர்ஹபொல, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங், எகிப்து அரபுக் குடியரசு தூதுவர் மஹீட் மொஸ்லோ, ஐக்கிய லக் வனிதா முன்னணியின் தலைவி சாந்தினி கொங்கஹகே மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மக்களது ஆணையுடன் மீண்டும் ராஜபக்‌ஷவினர் ஆட்சி பீடமேறுவர்

## SLPP பொதுச் செயலாளர் சாகர காரியவசம்



மக்களாணையுடன் ராஜபக்‌ஷவினர் மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவார்கள். மே தின கூட்டத்தில் எமது மக்கள் பலத்தை வெளிப்படுத்துவோம். செயற்பாட்டு ரீதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மே தின கூட்டம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தினால் மே தின கூட்டத்தை நடத்த முடியாமல் போனது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டு கொவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் கூட்டத்தை நடத்த முடியவில்லை. அதேபோல் 2022 ஆம் ஆண்டு முறையற்ற போராட்டத்தினால் மே தின கூட்டத்தை நடத்த முடியவில்லை. பாரிய போராட்டத்துக்கு மத்தியில் நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது.

04

# விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் பிரச்சினைகளுக்கு ஓரிரு தினங்களில் தீர்வு

லோரன்ஸ் செல்வநாயகம்

University Grants Commission

## பல். மானியங்கள் ஆ.குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவிப்பு

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில் நிலவும் சிக்கல்கள் ஓரிரு தினங்களில் முடிவுக்கு வருமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், மேற்படி விடயம் இதற்கு முன்னர் இருந்ததைவிட தற்போது தணிந்துள்ளதாகவும் விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் சாதகமான நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தாம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும்

04


## பொது மக்களுக்கான அறிவிப்பு

வழக்கறிஞர்கள் தமது வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தி பொலிஸ் நிலையங்களுக்கு வருகை தரும் போது, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் செயற்பட வேண்டிய விதி முறைகள் தொடர்பாக புதிய வழிகாட்டல் ஒன்றினை தயாரிக்க கௌரவ உயர் நீதிமன்றத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொது மக்களின் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் கருத்து மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் கௌரவ உயர் நீதிமன்றத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமது வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தி பொலிஸ் நிலையங்களுக்கு வருகை தரம் போது பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக உமது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 2 வாரங்களுக்குள் பணிப்பாளர், பொலிஸ் சட்டப் பிரிவிற்கு அனுப்பி வைக்க முடியும்.

- முகவரி - பொலிஸ் சட்டப் பிரிவில், இலக்கம் 234, வொக்ஸோல் வீதி, கொழும்பு 02
- தொலைநகல் - 011-2322685
- மின்னஞ்சல் - (E-Mail) legaldivision4@gmail.com

கருத்துக்களை அனுப்பி வைக்கும் நபரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு கொள்ளகூடிய தொலைபேசி இலக்கங்களையும் அனுப்பி வைக்குமாறு அன்பாய் வேண்டிக்கொள்கிறேன்.

**பொலிஸ்மா அதிபர்**
**இலங்கை பொலிஸ்**
**2023.04.25**


# இந்திய முட்டைகள் சில்லறை சந்தை விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சில்லறை சந்தையில் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திடமிருந்து அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை நுகர்வோருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் முன்னதாக அறிவித்திருந்தது.

நாட்டில் முட்டை தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வால் இந்தியாவில் இருந்து முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. எனினும், இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் மேல் மாகாணத்தில் உள்ள பாரியளவில் உற்பத்தியில் ஈடுபடும் வெதுப்பகத் தொழிற்துறைக்காக மாத்திரமே விற்பனை செய்வதற்கு இதுவரை அனுமதி வழங்கப்பட்டிருந்தது.



கொழும்பு தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் பத்மா இளங்கோவனின் மூன்று நூல்களின் அறிமுக விழா (சிறுவர் இலக்கிய நூட்பங்கள், சிறுவர் தமிழ் அமுதம், கொரோனா வின் தடங்கள்) கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை வானதி காண்டீபன் தலைமையில் நடைபெற்றது. மூன்று நூல்களின் முதல் பிரதிகளை புரவலர் ஹாஷிம் உமர் இளங்கோவனிடம் இருந்து பெற்றுக்கொள்வதையும் ரஞ்சனி சுப்பிரமணியம், ஞானம் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன், வானதி காண்டீபன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.

# கலையை தன் வாழ்நாள் முழுக்க நேசித்த கலைஞன் சந்திரசேகரன்

## அனுதாபச் செய்தியில் வி.டி.வி பாலன்



கலையை தன் வாழ்நாள் முழுக்க நேசித்தவர். அதனால் பொருளாதார வசதிகள் பெற்றாரோ இல்லையோ மகத்தான இலங்கையின் பெரிய விருதுகள், அரச விருதுகள் எல்லாம் பெற்றவர் கலைஞர் கே. சந்திரசேகரன். சென்னையிலிருந்து வி. டி. வி. பாலன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கலைஞர் கே. சந்திரசேகரன் என் ஞாபகத்தில் நிரந்தரமாக குடியிருந்த அருமை நண்பர். சிறுபிராயத்தில்

04


தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

| | சனிக்கிழமை 2023.04.29 | வெள்ளிக்கிழமை 2023.04.28 |
| --- | --- | --- |
| மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 5101 | 5100 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 15,266,921.00 | ரூ. 15,222,031.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | T 0 6 3 1 6 2 | B 7 1 1 8 5 9 |
| கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் | 3343 | 3342 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 99,715,461.84 | ரூ. 99,360,206.64 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | R 16 20 73 76 | P 01 18 51 66 |
| தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் | 1131 | 1130 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 88,028,818.40 | ரூ. 88,003,725.20 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | R 01 38 53 72 | N 07 71 73 78 |
| ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 1556 | 1555 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 10,396,306.40 | ரூ.10,338,459.60 |
| வெற்றி இலக்கங்கள் | 7 5 0 9 5 3 | 8 6 1 1 8 6 |
| ஹந்தஹன (சுப பலன்) — சீட்டிழுப்பு இலக்கம் | 410 | 409 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ.2,581,179.40 | ரூ.2,500,000.00 |
| வெற்றி இலக்கங்கள் | 22 28 40 54 | 04 31 37 56 |
| மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் | 1449 | 1448 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 317,942,362.00 | ரூ. 317,813,154.00 |
| ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் | W 12 — 12 13 40 77 | Q 02 — 21 31 46 51 |
| | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |
| | ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 |


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 206.30 | 219.03 |
| கனடியன் டொலர் | 228.52 | 242.56 |
| யூரோ | 343.37 | 362.22 |
| ஜப்பான் யென் | 2.3420 | 2.4688 |
| சிங்கப்பூர் டொலர் | 233.49 | 246.88 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.64 | 409.24 |
| சுவிஸ் பிராங்க் | 349.42 | 371.48 |
| அமெரிக்க டொலர் | 313.45 | 328.67 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 853.41 | கட்டார் ரியால் | 88.05 |
| குவைத் டினார் | 1,050.55 | சவூதி ரியால் | 85.78 |
| ஓமான் ரியால் | 835.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 87.61 |

## சம்பளம் கிடைக்கவில்லை...

கிடைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். சம்பளம் வழங்கப்படாமை தொடர்பான முறைப்பாடுகள் உடனடியாக ஆராயப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மே தினத்தையொட்டி ...

செலுத்தப்பட்டுள்ளதுடன் சுமார் 3500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, போக்குவரத்து நடவடிக்கைகளை கண்காணிப்பது, வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் தடையின்றி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் ஊர்வலங்களை ஏற்பாடுசெய்வோர் குறிப்பாக ஒரு பகுதி வீதியை பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே அதுதொடர்பில் இணப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் வீதியில் அடுத்த பகுதியில் போக்குவரத்து செய்யும் வாகனங்களுக்கு தடையேற்படுத்தாத வகையில் செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளை போதியளவு கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய மே தின ஏற்பாட்டாளர்கள் செயற்படுவது அவசியமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா தொற்றால்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் (28) உயிரிழந்ததாகவும், மற்றுமொரு நபர் 28ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் (29) உயிரிழந்துள்ளதாகவும் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோய் மீண்டும் நாடு முழுவதும் பரவும் அபாயம் இருப்பதாகவும், குறிப்பாக முகமூடி அணிந்து சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவது மிகவும் பொருத்தமானது என்றும் மரண பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

மருத்துவமனை வட்டாரங்களின் படி, கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட ஏராளமான நோயாளிகள் IDH மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் ஊழியர்களும் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3ஆவது சார்ள்ஸ் மன்னரின்...

8ஆம் திகதி காலமானார். அவரது மறைவின் பின்னர் இளவரசர் 3ஆவது சார்ள்ஸ் முடிக்குரிய மன்னராக அறிவிக்கப்பட்டார்.

இதன் பிரகாரம், 3ஆவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவை எதிர்வரும் சனிக்கிழமை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில், உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

முடிசூட்டு விழாவின் பின்னர், ஐக்கிய இராச்சியம் மற்றும் பொது நலவாய நாடுகளின் மன்னராக 3ஆவது சார்ள்ஸ் மற்றும் ராணியாக அவரது மனைவி கமிலாவும் திகழ்வார்கள். எவ்வாறாயினும், இந்த முடிசூட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரித்தானியா செல்லவுள்ளார். ஜனாதிபதி அங்கு பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய பிரதமர் உட்பட நிகழ்வில் கலந்துகொள்ளும் பிற நாட்டு தலைவர்களையும் சந்தித்து ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் காங்கேசன்துறை...

இடம்பெற்றுவரும் ஓமந்தை வரையிலான ரயில் பாதை திருத்த நடவடிக்கைகளில் முன்னேற்றம் தொடர்பில் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் அங்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், அநுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையிலான பழைமையான ரயில் பாதையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பாதை புதிதாக உருவாக்கப்பட்டு மணித்தியாலத்திற்கு 100 மீற்றர் வேகத்தில் ரயில்கள் பயணிக்கும் வகையில் இந்த பாதை நவீனமயப்படுத்தப்பட்டு வருகிறது.

மகவயிலிருந்து ஓமந்தை வரையிலான இந்த திட்டத்திற்காக இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் 3500 கோடி ரூபா நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை காணப்பட்டாலும் இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டம் இதுவாகும்.

இப்பாதையின் திருத்தப் பணிகள் துரிதமாக நடைபெற்றுவரும் நிலையில் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் காங்கேசன்துறை வரை ரயில் சேவையை ஆரம்பிக்க முடியுமென்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன் அநுராதபுரம் முதல் மகவ வரையிலான ரயில் பாதையை மிகக் குறுகிய காலத்திற்குள் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்படுவதுடன் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு வரை சொகுசாகவும் விரைவாகவும் பயணத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் ரயில்சேவைகள் நடத்தப்படும்.

அதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்ல செலவாகும் நேரத்தை ஒன்றரை மணித்தியாலத்தால் குறைத்துக்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டை வெற்றிப்பாதைக்கு...

இருந்ததால், அனைவரும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்த சவாலான காலங்களில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான கடினமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக, பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து உழைக்கும் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையின் உழைக்கும் மக்களின் பெருமையை உலகுக்குக் காட்டக் கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது இருப்பதோடு, இந்த இக்கட்டான நேரத்தில் குறுகிய அரசியல் நலன்களுக்கு இரையாகாமல் நாட்டை முதன்மைப்படுத்தி செயற்படுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க நாங்கள் எப்போதும் செயற்பட்டு வருவதோடு, அவர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகளை வென்றெடுப்பதன் மூலம், உழைப்புக்கு சரியான மதிப்புக் கிடைக்கும். சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே இன்றைய நாளின் எமது எதிர்பார்ப்பாகும்.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்தாலும் உழைக்கும் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

2048 ஆம் ஆண்டளவில் முன்னேற்றமடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான புதிய சீர்திருத்தப் பாதையில் ஒற்றுமையுடன் கைகோர்க்குமாறு அனைத்து உழைக்கும் மக்களையும் நான் அழைப்பதோடு, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்திற்காக அவர்களை வாழ்த்துகிறேன் எனவும் ஜனாதிபதி மே தினச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அரகலயவின் பின்னணியில் ..

போராட்டத்தின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பதை கண்டறிந்து, பணம் செலவழித்து ஆதரவு அளித்தவர்கள் யார் என்பதை விசாரிக்க வேண்டும்.

பல்வேறு நபர்களால் எழுதப்பட்ட புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளை முழுமையாக உண்மை என ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

போராட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறையின் போது முப்படையினரும் மௌனமாக செயற்பட்டது ஏன் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும், அவர்களுக்கு யார் உத்தரவு பிறப்பித்தது என்பதும் ஆராயப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களை தூண்டி விட்டு நாட்டின் சகல செயற்பாடுகளையும் சீர்குலைத்த இந்த போராட்டத்தின் உண்மையான தகவல்களை கண்டறிந்து நாட்டை இந்த நிலைக்கு தள்ளும் நபர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உழைக்கும் மக்களின்...

தொழிலாளர் வர்க்கத்தின் வியர்வையில் போஷிக்கப்பட்டுள்ள வரலாற்றை பதிவு செய்யும் வகையில் தாய்நாட்டில் நாம் 137 வது உலக தொழிலாளர் தினத்தை சிறப்பிக்கின்றோம். இம்முறை நாம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மே தினத்தை கொண்டாடுகின்றோம்.

இத்தகைய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள உலகின் பல்வேறு நாடுகள் தொழிலாளர் சமூகத்தின் பலத்தின் மூலமே மீண்டெழுந்துள்ளன. அது எனக்கும் பொருந்தும். மீண்டும் எமது பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்பும் நடவடிக்கைகளை விவசாயிகளும் தொழிலாளர் சமூகமும் ஆரம்பித்துள்ளன.

முதலில் விவசாயிகள் உணவில் நாடு தன்னிறைவு காண்பதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளனர்.

அதேபோன்று அனைத்து துறைகளிலும் புத்தெழுச்சி ஆரம்பமாகும். தற்போதைய நிலையில் இருந்து நாம் சிறந்த ஒரு நிலையை அடைவதற்கு இந்த உலக தொழிலாளர் தினத்தில் நாம் உறுதி பூணுவோம் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் எலிக்காய்ச்சல்...

லெப்டோஸ்பிரோசிஸ் அல்லது எலிக்காய்ச்சல் அதிகமாக பதிவாகியுள்ளது.

தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இந்த வருடத்தில் மாத்திரம் 229 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் 19 மரணங்கள் பதிவாகியுள்ளன.

எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்படுவது வயல்களில் வேலை செய்பவர்கள் மாத்திரமல்ல என காலி மாவட்ட சமூக விசேட வைத்திய நிபுணர் டொக்டர் அமில சந்திரசிறி தெரிவித்தார்.

## ஆலயத்தினுள் மின்சாரம்...

ஆலயத்தை அலங்கரித்துக்கொண்டிருந்தபோது, ஆலயத்தின் கதவில் இருந்த மின்கம்பியில் மின்சார ஒழுக்கு காணப்பட்ட நிலையில், அந்த மின்கம்பியில் அவ்விளைஞரின் கை பட்டு, மின்சாரம் தாக்கி, சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு மின் தாக்கி உயிரிழந்தவர் 29 வயதான நா. கபிலன் என்கிற இளைஞனாவார்.

சம்பவ இடத்துக்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு ...

கடந்த வருடம் மார்ச் மாதத்தோடு ஒப்பிடுகையில், இந்தத் தொகை அதிகரித்துக் காணப்படுவதுடன் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் அது 318 மில்லியன் டொலராக காணப்பட்டதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்த வருடத்தின் கடந்த முதல் மூன்று மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் 1.413 மில்லியன் அமெரிக்கன் டொலர் கிடைத்துள்ளதாகவும் அத்துடன் இந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் சுற்றுலாத்துறை மூலம் 198 மில்லியன் அமெரிக்கன் டொலர் கிடைத்துள்ளதாகவும் அந்த வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் சுற்றுலாத்துறை மூலம் கிடைத்துள்ள நிதி 161 மில்லியன் அமெரிக்கன் டொலராக பதிவாகியுள்ளதாகவும் அத்துடன் கடந்த மார்ச் மாத இறுதியில் நாட்டின் தேசிய கையிருப்பு 2.7 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும் அந்த வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த வருடத்தில் முதற்தடவையாக நாட்டிலிருந்து பொருட்கள் ஏற்றுமதி செய்துள்ளதன் மூலம் வருமானம் 1 பில்லியன் டொலரை கடந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அந்த வங்கி எவ்வாறாயினும் கடந்த மார்ச் மாதத்தோடு ஒப்பிடுகையில் இந்த மார்ச் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் சிறு அளவில் குறைவடைந்துள்ளதாகவும் அதற்குக் காரணம் ஆடை ஏற்றுமதி மூலமான வருமானம் குறைவடைந்துள்ளமையே என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## தொழிலாளர்களது...

சஜித் பிரேமதாச விடுத்துள்ள மே தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒரு நாடாக நாம் பல கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் சூழ்நிலையில்,நமது நாட்டு உழைக்கும் மக்களும் உலகத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாட வேண்டியுள்ளதோடு, பல ஆண்டு கால தூர நோக்கற்ற ஆட்சியால் ஏற்பட்ட தன்னிச்சையான போக்கின் விளைவே இதுவாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சியைப் பொறுப்பேற்றதன் மூலம் எமது நாடு வரலாற்று ரீதியிலான பின்னடைவைச் சந்தித்தது.

மக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் கடுமையான படுகுழியில் விழுந்து கொண்டிருப்பதோடு, ஏராளமானோர் வேலை இழந்துள்ளனர். வேலையின் கண்ணியத்தை முற்றிலுமாக ஒழித்து அவர்களை அவமதிக்கும் நிலையை அரசாங்கம் எட்டியுள்ளது. பல ஆண்டுகளாக சம்பள அதிகரிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு அரசியல் பழிவாங்கல்கள் சக்திவாய்ந்ததொரு அடக்குமுறை சூழ்நிலையாக வளர்ந்துள்ளது.

சனத்தொகையில் 14.3% பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற நிலையில், பொருளாதார நெருக்கடியின் அழுத்தம் மிகவும் கடுமையானதாக இருக்கும் என மத்திய வங்கி கணிப்புகள் எதிர்வு கூறியுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில்தான் நமது நாடு தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகிறது.

இந்நிலையை மாற்றி,மனித சுதந்திரத்தையும், நாட்டின் அபிவிருத்தியையும் நிலைநிறுத்த,நிலைபேறான வேலைத்திட்டம் கொண்ட குழுவினால் மட்டுமே முடியும் என்பது இன்று நன்றாகவே நிரூபணமாகியுள்ளது.

தோல்வியுற்ற முதலாளித்துவம் அல்லது காலாவதியான சோசலிசத்தில் இருந்து ஒரு நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பது யதார்த்தமாவதோடு,

முற்போக்குத் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட நடுநிலையானதொரு பாதையால் மட்டுமே இதை மேற்கொள்ள முடியும்.

## பிரதான கட்சிகளின்...

மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் 'சவால்களை வீழ்த்தி அபிலாஷைகளை வெற்றிகொள்வோம்' என்ற தொனிப்பொருளில் கட்சியிலுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்களுடன் இணைந்து பொரளை கெம்பல் மைதானத்தில் தமது மே தினக் கூட்டத்தை பி.ப. 2.00 மணிக்கு நடத்தவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அதன் பங்காளிக் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் பி.ப. 3.00 மணிக்கு புறக்கோட்டை ஏ.ஈ. குணசிங்க விளையாட்டரங்கில் தமது மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளதுடன் அதன் ஊர்வலம் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டரங்கிற்கு அருகிலிருந்து பி.ப. 1.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி மே தினக் கூட்டம் கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் அந்தக் கட்சியுடன் இணைந்த அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்களுடன் இணைந்து பி.ப. 4.00 மணிக்கு நடத்தவுள்ளது.

அதன் மே தின ஊர்வலம் பி.ப. 2.00 மணிக்கு ஹவ்லொக் டவுண் பி.ஆர்.சி. விளையாட்டரங்கிற்கு அருகிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது அக்கட்சியின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து தமது மே தினக்கூட்டத்தை கண்டி பொது வர்த்தக சந்தை முன்றலில் பி.ப. 1.00 மணிக்கு நடத்தவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்துள்ள மே தினக் கூட்டம் இன்று பி.ப 2.00 மணிக்கு யாழ்ப்பாண நகரில் ஆரம்பமாகவுள்ளதுடன் மட்டக்களப்பு களுவன்கேணியிலும் மே தினக் கூட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இம்முறை அக்கட்சியின் கிளைகள் அமைந்துள்ள பெருந்தோட்ட பகுதிகளில் பல கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளது. அத்துடன் சுதந்திர மக்கள் சபை தமது மே தினக் கூட்டத்தை கண்டியில் சகஷ்ரா பூங்காவில் பி.ப. 3.00 மணிக்கு நடத்தவுள்ளது.

இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் பதுளை நகரில் பி.ப. 1.00 மணிக்கு தனது மேதினக் கூட்டத்தை நடத்தவுள்ளதுடன் அதன் ஊர்வலம் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முன்னிலை சோஸலிசக் கட்சி அதன் தொழிற்சங்கங்களுடன் இணைந்து நுகேகொடை ஆனந்த சமரக்கோன் வெளியரங்கில் பி.ப 3.00 மணிக்கு அதன் மே தினக் கூட்டத்தை நடத்தவுள்ளது. அதற்கான ஊர்வலம் பி.ப. 1.00 மணிக்கு தெல்கந்த சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

அதேவேளை, இலங்கை சுதந்திர சேவையாளர் லெஸ்லி தேவெந்திரவின் தலைமையில் கண்டி சிங்கள வர்த்தக முன்னணி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடத்தவுள்ளது. அத்துடன் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் சுதந்திர வர்த்தக வலய பொது ஊழியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட 35 சுயாதீன தொழிற்சங்கங்கள் தமது மே தினக் கூட்டத்தை மாளிகாவத்தை பி.டி. சிறிசேன விளையாட்டரங்கில் பி.ப. 3.00 மணிக்கு நடத்தவுள்ளதுடன் அதற்கான ஊர்வலம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக மதியம் 1.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

# 50 போதை மாத்திரைகளுடன் சிவில் பாதுகாப்பு படைவீரர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

விற்பனை செய்வதற்காக 50 போதை மாத்திரைகளை தம் வசம் வைத்திருந்த சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸ் விசேட செயலணிக் குழு தெரிவித்துள்ளது.

மேற்படி நபரை செட்டிக்குளம் பகுதியிலுள்ள குளத்தின் அருகில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர் கெப்பித்திக் கொல்லாவ சிவில் பாதுகாப்பு செயலணி முகாமில் கடமையில் ஈடுபட்டு வருபவர் என்றும் அவர் எடிகெஹெல்கமுவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவரென்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி செயலணியின் செட்டிக்குளம் பொலிஸ் பரிசோதகர் குருசிங்கவின் தலைமையிலான குழுவினரே சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## மக்களது ஆணையுடன்... (03ஆம் பக்கத் தொடர்)

மே தின கூட்டத்தை நடத்துவதற்கான வாய்ப்பை சகல அரசியல் கட்சிகளுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

எமது மக்கள் பலத்தை இன்றைய தினம் கெம்பல் மைதானத்தில் இடம்பெறும் மே தின கூட்டத்தில் வெளிப்படுத்துவோம். மக்களாணையுடன் ராஜபக்ஷவினர் வெகுவிரைவில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவார்கள். மே தின கூட்டத்தில் இருந்து செயற்பாட்டு ரீதியான எமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுக்கூட்டங்களை இனி முன்னெடுப்போம் என்றார்.

## விடைத்தாள் திருத்தும்... (03ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ள அவர் இந்த சிக்கல்கள் ஓரிரு தினங்களில் முடிவுக்கு வருமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மத்தியில் எத்தகைய சிக்கல் நிலையும் காணப்படவில்லையென்பதைக் குறிப்பிட்டுள்ள அவர் ஓரிரு தினங்களில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படுமென்றும் சுயாதீனமாக அதற்காக முன்வந்துள்ள குழுக்கள் அதற்கான இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் பேராசிரியர்களினால் சுயாதீனமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருவிடயம் என்பதைக் குறிப்பிட்ட அவர், அதில் பாரிய சிறப்புத்தன்மை காணப்படுவதாகவும் அது பாதுகாக்கப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் மற்றும் விடைத்தாள் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆகியன பரீட்சைகள் திணைக்களத்துடன் தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்படுவதாகவும் அந்தவகையில் விடைத்தாள்களில் ரகசியத் தன்மை பாதுகாக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சூடானில் மீட்கப்பட்ட... (03ஆம் பக்கத் தொடர்)

குழுவினரை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். இதேவேளை, 6 இலங்கையர்கள் அடங்கிய குழுவொன்று தற்போது சவுதி அரேபியாவை சென்றடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி, சூடானில் இருந்து இதுவரையில் 19 இலங்கையர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

## கலையை தன் வாழ்நாள்... (03ஆம் பக்கத் தொடர்)

அரைகால் சட்டை அணிந்து கொண்டு தெமட்டகொடை வீதிகளில் நாங்கள் நடந்த நாட்கள் இன்றும் நினைவுகளில் நிழலாடுகிறது. அந்த வகையில் அந்த குடும்பத்தோடு எங்களுக்கு நீண்ட உறவு இருந்தது. சந்திரசேகரனைப் பொறுத்த வரையில் ஆத்மார்த்தமான நண்பன். பொய்யாக பழகத் தெரியாத ஒருவர். யாரையும் ஏமாற்றத் தெரியாத குணாதிசயம் கொண்டவர். அது மிகப் பெரிய விசயம்.

கலையை தன் வாழ்நாள் முழுக்க நேசித்தவர். அதனால் பொருளாதார வசதிகள் பெற்றாரோ இல்லையோ மகத்தான இலங்கையின் பெரிய விருதுகள், அரச விருதுகள் எல்லாம் பெற்றவர். அவர் சென்னை வரும் போதெல்லாம் என்னை சந்திப்பார்.

வேகமாக காலாண் அவரை கவர்ந்து சென்று விட்டான். அவரது குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் நண்பா்களுக்கும் எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. அவரது மறைவால் எனக்கே ஆறுதல் தேவைப்படுகிறது. யாருக்கு ஆறுதல் சொல்ல நண்பா.

எத்தனை எத்தனை நாடகங்கள், ராஜத் துரோகி என்ற ஒரு நாடகம். இன்னும் இன்னும் இதுபோல் எத்தனை எத்தனையோ நாடகங்கள்... பெயர்கள் என் ஞாபகத்துக்கு வரவில்லை. வானொலியில் உன் குரலால் உயிரோட்டம் கொடுத்தவன் மறக்க முடியவில்லை உன்னை.

## நாட்டை கட்டியெழுப்ப ...

முடியவில்லை எனத் தெரிவித்துள்ள அவர் , இதனை சில ஊடகங்கள் தவறாக சித்தரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலன்னறுவையில் இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வறுமை நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியமாகும். எனவே நாணய நிதியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறும் தரப்பினர் ஆட்சியைப் பொறுப்பேற்றால் மாத்திரமே அதனை உணர முடியும். நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றியிருக்கின்றேன். எனவே அதன் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை நான் நன்கு உணர்ந்திருக்கின்றேன்.

இம்முறை நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்திலும் சிறந்த பல விடயங்கள் உள்ளன. அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்று எண்ணுபவர்களே இதற்கு எதிராக கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

2018ஆம் ஆண்டு காணப்பட்ட நிலைமைக்கேனும் நாட்டைக் கொண்டு வர வேண்டும் என்பதே தற்போதைய அரசாங்கத்தின் முயற்சியாகக் காணப்படுகிறது. தனிப்பட்ட தேவைகளுக்காக பொலன்னறுவையில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறன்றி நான் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டிருந்தால் நாணய நிதியத்தின் ஏற்பாடுகளுக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பேன்.

ஆனால் சில ஊடகங்கள் இதனை தவறாக சித்தரித்து செய்திகளை வெளியிடுகின்றன. அத்தோடு இதில் காணப்படும் சில கடுமையான நிபந்தனைகளை நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து நீக்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும். எனது ஆட்சி காலத்திலும் இவ்வாறான நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அவற்றை நீக்கிக் கொள்ள என்னால் முடிந்தது என்றார்.

## அமைச்சு இராஜாங்க....

அடிப்படையில் செயலாளர்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலனுக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றத்தை அடைவது மிகவும் நெருக்கமாக கண்காணிக்கப்படும் மற்றொரு பகுதியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் தொடர்பான எந்த முடிவையும் எடுப்பதற்கு முன், செயலாளர்கள் செயலாற்றத் தவறிய பகுதிகளும் அவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான புள்ளிகளை வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.

அந்தந்த அமைச்சர் மற்றும் பிற அமைச்சுகளுடன் ஒருங்கிணைக்கும் திறன், மற்றைய அதிகாரிகளுடன் முரண்படும் பிரச்சினைகள் என்பனவும் மதிப்பீட்டுச் செயல்பாட்டில் கருத்தில் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், 65க்கு மேல் அதிக புள்ளிகளை பெற்றவர்கள் அதே அமைச்சில் தக்கவைக்கப்படுவார்கள் என்றும் 50 முதல் 65 வரை உள்ளவர்கள் இடமாற்றத்திற்கு பரிசீலிக்கப்படுவார்கள் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், 50 புள்ளிகளின் கீழ் பெறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்கள் அமைச்சின் செயலாளர் பதவியையும் இழக்க நேரிடலாம். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் இருப்பவர்கள் அவர்களது ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ள வேண்டியும் ஏற்படலாம் என்றும் குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சுக்களின் செயலாளர்களாக பணியாற்றுவதற்கு அதிகாரிகளை தெரிவு செய்யும்போது இந்த புள்ளி முறைமை கவனத்தில் கொள்ளப்படும்.

அதிகாரிகள் மீதான தொடர் நடவடிக்கைகளுக்காக, காலாண்டு அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மக்களுக்கு சிறந்த மற்றும் திறமையான சேவை வழங்கப்படுவதை உறுதி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## மானுடவியல்
(தொடர்)



# சாக்கிய நாயனார்

114

அருவமாகியும், உருவமாகியும் உள்ள எல்லாப் பொருள்களுக்கும் காரணமாய் இறைவனுக்குத் திருமேனியாகிய சிவலிங்கத்தின் பெருமையுணர்ந்து நாள்தோறும் அதனை வழிபட்ட பின்னரே உண்ணுதல் வேண்டும் என விரும்பினார். தாம் இருக்கும் இடத்திற்கு அண்மையில் வெட்ட வெளியிலே அமைந்துள்ள சிவலிங்கத்தினைச் சென்று கண்டு பெருமகிழ்ச்சி கொண்டவராய், அம்மகிழ்ச்சியின் விளைவாய் ஒன்றுந் தோன்றாது அருகிற்கிடந்த செங்கற்சல்லியை எடுத்து அதன்மேல் எறிந்தார். இளம்புதல்வர் இகழ்வனவே செய்தாலும் அச்செயல் தந்தையார்க்கு உவப்பனாற்போன்று,



சாக்கியர் செய்த இதுவும் சிவபெருமானுக்கு உவப்பாயிற்று. இறைவன் அவர் அன்பினால் எறிந்த கற்களை நறுமலர்களாகவே ஏற்றுக்கொண்டார். சாக்கியர் அன்றுபோய் மறுநாள் அங்கு வந்தபொழுது முதல்நாள் தாம் சிவலிங்கத் திருமேனியின் மேல் செங்கல் எறிந்த குறிப்பினை எண்ணி, 'நேற்று இந்த எண்ணம் நிகழ்ந்தது இறைவன் திருவருளே' என்று துணிந்து அதனையே தாம் செய்யும் வழிபாடாகக் கருதி எப்பொழுதும் அப்படியே செய்து வந்தார்.

ஒருநாள் சாக்கியர் அச்செயலை மறந்து உணவு உண்ண ஆயத்தமான போது 'இன்று எம் பெருமானைக் கல்லால் எறிய மறந்துவிட்டேன்' என்று விரைந்தோடிச் சிவலிங்கத்தின் முன்சென்று ஆராத வேட்கையால் ஒரு கல்லை எடுத்து அதன்மேல் எறிந்தார். அவரது அன்பிற்கு உவந்த சிவபெருமான் விடைமீது உமையம்மையாருடன் தோன்றி அருளினார். அத்தெய்வக்காட்சியைக் கண்ட சாக்கிய நாயனார், தலைமேல் இருகைகளையும் குவித்து நிலமிசை வீழ்ந்திறைஞ்சினார். சிவபெருமான் சிவலோகத்தில் தம்பக்கத்தேயிருக்கும் பெருஞ்சிறப்பினை அவர்க்கு அருளினார்.

கலாநிதி சிவஶ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# காலம் கடந்த சைவமும் தமிழும்

**உலகெங்கும் உள்ள அத்தனை மதங்களும் கடவுளைக் காட்டுவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டன. எந்த மதமும் மனிதனை தீய வழிக்கு இட்டுச்செல்லவில்லை. ஆனால் எல்லா மதங்களும் தோன்றிய காலமும் ஸ்தாபகர்களும் உண்டு. சைவசமயத்திற்கே காலவரையறை கிடையாது. மானிட ஸ்தாபகரும் கிடையாது. ஆதியும், அந்தமும் இல்லாத சமயம் சைவம் என்பதையும் அதன் மொழி தமிழ் என்பதையும் எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.**

'இல்லாத ஒன்று தோற்றத்திற்கு வர முடியாது. இயங்காத ஒன்று தோற்றங்களை உருவாக்க முடியாது'

என்பது விஞ்ஞானம் தந்த உண்மை. இந்த ரீதியில் உலகமும் உயிரினங்களும் தோன்றுவதற்கு முன்பு ஏகமாய் எங்கும் பரந்து அசைவற்று ஏதோ ஒன்று இருத்தல் வேண்டும். அந்த ஒன்று தனது ஆற்றலை உணரத்தொடங்கிய வேளை அசைவு நிலை ஏற்படுத்தப்பட்டது.

'எங்கே ஓர் அதிர்வு அல்லது சலனம் ஏற்படுத்தப்படுகின்றதோ அங்கே சப்த அலைகள் தோன்றும்' என்பது விஞ்ஞான ஆய்வின் முடிவு. இதன் படி ஏகமாய் இருந்த அந்த மாபெரும் சக்தி அசையத் தொடங்கியதும் பொருளும் அதன் இயக்கமும் ஆக இரு நிலைபெற்று அங்கு ஏற்பட்ட அசைவின் வேகத்தால் பல சப்த அலைகள் தோன்றி அண்ட வெளி எங்கும் பரந்துநின்றன. அறிவு, சத்தியம்,நுண்மை, கூர்மை ஆகிய அனைத்தும் நிறைந்த இச் சப்தஅலைகளின் ஒருமித்தஒலிதான் 'ஓம்' எனும் பிரணவமந்திரஒலியாகும். எனவே உருவமற்ற இறைசக்தியின் முகத்தோற்றம் ஓம்காரஒலியாகும். இவ்வொலிமண்டலத்திலிருந்துதான் அனைத்துத் தோற்றங்களும் வெளிவந்தன. உலகங்கள் தோன்றியதும் ஒடுங்குவதும் அவதார மூர்த்திகள் பூமிக்கு வருவதும் திரும்பி நிலைத்து நிற்பதும் இவ் ஓம்கார மண்டலமே. எல்லாப் பருப்பொருட்களின் நுண்மையான வடிவங்களும் ஒலியில் அடங்கி உள்ளன என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும்.

காதுக்கு எட்டாத ஒலியில் அடங்கி நின்ற சப்த அலைகளை மகா ரிஷிகளும், ஞானியரும் தம் ஆற்றலால் கிரகித்து உலகிற்கு தந்தவை தான் வேத மந்திரங்களும் அம் மந்திரங்களுக்குரிய ஈஸ்வரத் தோற்றங்களுமாகும் . அந்த வகையில் ஓம் காரத்தின் திருஉருவம் மகா கணபதியாகும். இதனால் தான் எல்லா மந்திரங்களும் 'ஓம்' என்னும் ஒலியை முதன்மையாகக் கொண்டு ஒலிக்கின்றன. 'ஓம்' இன்றி எந்த மந்திரமும் இல்லைஅதேபோல் ஈஸ்வரத் தோற்றங்கள் அத்தனைக்கும் முதல் தோற்றம் பிள்ளையாராகும். பூசைகளிலும் வணக்க முறையிலும் பிள்ளையாருக்கு முதலில் கொடுப்பதன் அர்த்தமும் இதுவே..

ஆகவே உலகங்கள் தோன்றி அதில் மனித இனம் தோன்றி இவற்றை தம் ஆற்றலால் கிரகித்து உலகிற்கு வழங்கியமைக்கு காலம் கணிக்கலாம். ஆனால் சைவத்தின் மிக ஆழமான அர்த்தங்களை உள் அடக்கிக் கொண்டிருந்த அந்த 'ஓம்' எனும் தமிழ் மந்திரத்திற்கு காலம் கணிப்பிட யாராலும் முடியாது. மனிதன் தோன்றுவதற்கு முன்பே ஆட்டுக் குட்டியும் மாட்டுக் கன்றும் பிறந்தவுடன் உச்சரித்த மொழி' அம்மா' என்னும் ஒலி அது தமிழ் ஒலி இத்தனை ஆழமும் நுணுக்கமும் அர்த்தங்களும் உள்ளடக்கிய காலம் கடந்த சைவ சமயத்தின் அத்தனை வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்கள் ஆலயங்கள் சைவ நெறியையும் தமிழ் மொழியையும் மக்கள் மத்தியில் நிலை ஊன்றச் செய்கின்ற பெரும் பணியை ஆலயங்கள் ஆற்ற வேண்டும் என்பதனை முன் வைத்து முடிவு செய்கின்றேன்.





'ஓம் எனும் மந்திரம் ஒலிக்கட்டும் எங்கும்'
திருமதி பாக்கியரெத்தினம் ஆறுமுகம்





பாணந்துறை அருள்மிகு கந்தசாமி கோவில் மஹோற்சவ கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஆலய மஹோற்சவ குருக்கள் "கிரியா க்ரம ஜோதி" சிவஶ்ரீ இலக்ஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் கிரிகைகளை நடாத்தி கொடியேற்றி வைப்பதையும் கொடிமரத்திற்கான அபிஷேகத்தை தொடர்ந்து சுவாமி வெளிவீதிவலம் வருவதையும் கலந்துகொண்ட பக்தர்களையும் காணலாம்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19609) மாலை நேரத்தில் சாப்பிடக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வதன் காரணம் என்ன?**
சாப்பிடுவது, தூங்குவது, நகம் வெட்டுவது போன்றவை குறிப்பிட்ட நேரங்களில் தான் செய்ய வேண்டும். காலை, மாலை ஆகிய இரு வேளைகளும் தெய்வ வழிபாட்டை தவிர மேற்படி விஷயங்களை செய்யக்கூடாது.

**19610) செவ்வாயும், வெள்ளியும் பொருள் வாங்கிச் சேர்த்தால் என்ன நடக்கும்?** வளரும்.
செவ்வாய், வெள்ளிக்கிழமையில் வீட்டில் ஒட்டடை அடிக்கலாமா? இவ்விரு நாட்களிலும் வீட்டைத் துடைப்பதில்லை. முதல்நாளே ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தி விடுங்கள்.

**19611) வீட்டில் விளக்கேற்றும் போது சுவாமி படங்களுக்கு பூ கட்டாயம் போட வேண்டுமா?**
காலையில் விளக்கேற்றி பூ சாத்தி வழிபடவேண்டும். மாலையில் பூ கட்டாயமில்லை.

**19612) கண்ணை மூடிக் கொண்டு கடவுளை வழிபடக்கூடாது என்கிறார்களே! உண்மையா?**
கடவுளின் திருவுருவம் கண் முன்னே இருக்கும்போது கண்ணாரக் கண்டு வழிபட வேண்டும். திருவுருவம் இல்லாத இடத்தில் வழிபட வேண்டிய காலத்தில், கண்ணை மூடி மனதில் கடவுளின் உருவத்தை நிலை நிறுத்தி வழிபாடு செய்யலாம்.

**19613) கோயிலில் முதலில் யாரை தரிசித்து வலம் வர வேண்டும்?**
பிரதான மூலவரை

**19614) அடுத்து யாரை தரிசித்து வலம் வரவேண்டும்?**
அம்பாள் மற்றும் பரிவாரங்களை தரிசித்து வலம் வர வேண்டும்.

**19615) மூன்றாவது யாரை தரிசித்து வலம் வரவேண்டும்?**
நவக்ரஹம், சண்டிகேஸ்வரர், பைரவர் ஆகியோரை தரிசித்து வலம் வரவேண்டும்.

**19616) பஞ்சாங்கத்தில் நட்சத்திரம் திதி போன்றவை மதியம் ஆரம்பித்து மறுநாள் மதியம் வரை இருந்தால் விரதம் வழிபாட்டை எப்போது செய்ய வேண்டும்?**
விரதம், வழிபாடு மேற்கொள்வதற்கு இரவில் திதி வியாபித்து இருக்கவேண்டும் என்பது நியதி. அதனால் முதல் நாளிலேயே விரதத்தை மேற்கொள்ள வேண்டும் என கூறப்படுகிறது. திதி கொடுப்பது, தர்ப்பணம் செய்வது போன்றவற்றிற்கு இது பொருந்தாது.

**19617) பொதுவாக எவற்றுக்கு இடையில் அல்லது யாருக்கு குறுக்கே செல்லக்கூடாது என்பார்கள்?**
சுவாமி நந்தி, கணவன் மனைவி, பெற்றோர் குழந்தை, குரு சிஷ்யன், பசு கன்று ஆகியோருக்கு குறுக்கே செல்லக்கூடாது என்பது சாஸ்திர நியதி.

**19618) சிவன் கோயிலில் சுவாமிக்கும் நந்திக்கும் இடையில் செல்லக்கூடாது என்பது ஏன்?**
நந்திதேவர் தமது மூச்சுக் காற்றின் வாயிலாக சுவாமிக்கு சாமரம் வீசி வழிபட்டுக் கொண்டே இருக்கிறார். அது தடைபடாமல் இருக்க நாம் இடையில் செல்லாமல் இருக்க வேண்டும்.

**19619) சுவாமிக்கு சாத்திய மாலையை வாகனத்தின் முன் கட்டிக் கொள்ளலாமா? சுவாமிக்கு சாத்திய மாலைகள் என்னவாகும்?**
வாகனங்களில் கட்டிக் கொள்வதால் அது செல்லும் இடம் எல்லாம் சிதறி விழும். காலில் படும்படியாக எங்கும் விழ வைக்கக்கூடாது.

**19620) இதனால் என்ன நடக்கும்?**
அதன் மீது மற்றைய வாகனங்கள் ஏறிச்செல்வது, நம் காலில் படுவது போன்ற தவறுகள் ஏற்படலாம். இது பாவச் செயல். செய்யக்கூடாது.

**19621) வீட்டிலிருந்து கிளம்பும்போது மூன்று பேராகச் செல்லக்கூடாது என்பது உண்மைதானா?**
சுபநிகழ்ச்சிகள் தொடர்பாக பேசச் செல்லும் போது மட்டும் மூன்று பேராகச் செல்லக்கூடாது. மற்ற நிகழ்ச்சிகளுக்கு பிரச்சினையில்லை என்று சொல்லப்படுகிறது.

**19622) வாழ்க்கை நவக்கிரகங்களுக்கு கட்டுப்பட்டதா அல்லது முற்பிறவி பாவபுண்ணிய அடிப்படையில் அமைக்கப்படுகிறதா?**
முற்பிறவி பாவ புண்ணிய பலன்களின் அடிப்படையில் தான் வாழ்வு அமைகிறது. அதற்கான பலனைத் தரும் அதிகாரம் நவக்கிரகங்களின் கையில் உள்ளது. இதனால் தான் நவக்கிரகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபடுகிறோம்.

# பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நிகழ்வுகள் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இவ்விழா எதிர் வரும் 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை வரை இடம் பெற உள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ லக்ஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வரும் இந் நிகழ்வில் எதிர்வரும் 03.05.2023 புதன்கிழமை இரவு 8 மணிக்கு சப்பர த் திருவிழாவும் 04 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் 06 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமான் பூங்காவன நகர் வலம் வருதலும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 04 மணிக்கு வைரவர் பூஜையுடன் திருவிழா நிறைவு பெற உள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## "யுகரிஷியின் ஆன்மீக சிந்தனைகள் - 36



உறுதியில்லாத மனிதன் பிறரைச் சார்ந்தே இருப்பான். தன் புத்தியையும் நம்ப மாட்டான்; தன் முடிவிலும் நிலையாக இருக்க மாட்டான். உறுதியான நிலைப்பாடு இல்லாமலும். ஒருமுகப் படுத்திய மனநிலைமை இல்லாமையினாலும் மனிதன் பலவிதமான இன்னலுக்கு ஆளாகிறான். இதனால், தன் ஆற்றல் முழுவதையும் இழக்கிறான். எந்த ஒரு செயலிலும் வெற்றியடைய, ஒருமுகப் படுத்தப்பட்ட ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

வெற்றி அடைவதில் உறுதி கொள்ள வேண்டும். தெளிவான ஒரு முடிவு எடுத்த பின் அதை நிறைவேற்றுவதில் நம் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். எந்த ஒரு செயலையும் முடிவெடுப்பதற்கு முன் தனது நலம் விரும்பிகள். நண்பர்கள். அறிவு ஜீவிகள் என் பலரிடமும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆலோசிக்கலாம். ஆனால் முடிவெடுத்த பின்னர், தயங்காமல் அச்செயலை முடித்து வெற்றி காண்பது ஒன்றே தன் முழு மூச்சாகக் கொள்ள வேண்டும். தனது தகுதி. தன்னுடைய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தன்னம்பிக்கையுடன் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தாம் மேற்கொண்ட செயல்கள் துணிச்சலுடனும், கொள்கை உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும். ஆண்மையுடனும் கடமையாகும். அதன் பலனை ஆண்டவனிடத்தில் விட்டுவிட செயல்படுத்துவது மட்டுமே நம் வேண்டும். கடவுள் நிச்சயம் நமக்கு முன்னேற்றத்தை தருவார். நாம் விரும்பிய வாழ்க்கையை நமக்குத் தருவார்.

சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வது என்பது. மனித வாழ்க்கைக்கு உகந்தது ஆகாது. சுயநலத்துடன் பிறந்து, சுய நலத்துடன் வளர்ந்து, தான் மட்டுமே உண்டு. உடுத்தி வாழ்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றது போல் தெரிந்தாலும், உண்மையில் அவன் தோற்றுப் போனவனே ஆவான்.

மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே. இப்படைப்பின் நோக்கமாகும்.

# வத்தளை பங்களாவத்தை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன், கந்தான புதுகம ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறநெறி பாடசாலைகள்






அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அறநெறி பாடசாலைகளுக்கிடையிலான புத்தாண்டு விழாவில் வத்தளை பங்களாவத்தை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறநெறி பாடசாலை, கந்தான புதுகம ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறநெறி பாடசாலை ஆகியவற்றின் மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் இந்த இரு அறநெறி பாடசாலைகளினதும் அதிபர் திருமதி விஜயகுமாரின் தலைமையில் கலந்து கொண்டபோது....

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் சித்திரை மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷவ்வால் பிறை 10

### குறள் தரும் சிந்தனை



வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்

பெருஞ்செல்வம் குவித்துக்கொண்டு என்னதான் வகைவகையான வாழ்க்கைச் சுகங்களை அனுபவித்தாலும், தகுதி வாய்ந்த பெரியோரின் கோபத்துக்கு முன்னால் அவையனைத்தும் பயனற்றுப் போகும்.

# தொழிலாளர்களின் சக்தியை தவறாக பயன்படுத்தலாகாது!

சர்வதேச தொழிலாளர் தினம் இன்றாகும். இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் இத்தினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. இதன் நிமித்தம் பல வாரங்களுக்கு முன்பிருந்தே திட்டமிடல்களும் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் அன்றைய தொழிலாளர்கள் முன்னெடுத்த போராட்டங்கள், ஊர்வலங்களே தொழிலாளர் விடுதலைக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து வளர்ச்சி அடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 12 முதல் 18 மணி நேரம் வேலை செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தனர். அதற்கு எதிராக இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தொழிலாளர்கள் குரல் எழுப்பினர். ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

அந்த வகையில் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 1886 இல் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலயமாக ஆக்கக் கோரிக்கை தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தின் போது திடீரென கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. அதனால் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சில தொழிலாளர்கள் காயமடைந்ததோடு, தொழிலாளர் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. அவர்களில் 7 பேருக்கு தூக்குத் தண்டனையும் நிறைவேற்றப்பட்டது.

1887 நவம்பரிலும் மேலும் சில தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். அவர்களுக்கான இறுதி ஊர்வலத்தில் முழு அமெரிக்க மக்களுமே அணிதிரண்டு பங்கு கொண்டனர். அதன் ஊடாகப் பெற்றுக்கொண்ட, நாளுக்கு 08 மணி நேர வேலைக்கான உரிமையையும் சிக்காகோ தியாகிகளின் தியாகமும் வருடாவருடம் மே தினமாக உழைப்பவர் தினமாக கொண்டாடப்படுகிறது.

அன்றைய தொழிலாளர்கள் இரத்தம் சிந்தித்தான் இந்த உரிமையைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களது போராட்டத்தையும் அதன் நிமித்தம் அவர்கள் சிந்திய வியர்வை மற்றும் இரத்தத்தையும் நினைவு கூருவதே இத்தினத்தின் அடிப்படை நோக்கமாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் இத்தினத்தில் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கூட்டங்களும் அரசியல் கட்சிகளால் நடத்தப்படுகின்றன. அதன் நிமித்தம் தொழிலாளர்களின் பங்களிப்பு பெரிதும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. தொழிலாளர்களின் பலத்தையும் சக்தியையும் நன்கறிந்து கொண்டுள்ள சில அரசியல் கட்சிகள் தங்கள் பலத்தை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக இத்தினத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

அதன் ஊடாக அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்வதே அக்கட்சிகளின் எதிர்பார்ப்பாகும். தொழிலாளர்களின் நலன்கள், அவர்களது எதிர்பார்ப்புகள் எதுவும் இத்தினத்தில் கருத்தில் கொள்ளப்படுவதும் இல்லை. அவர்கள் அடைந்து கொண்டுள்ள பிரதிபலன்கள், நன்மைகள் எதுவும் நினைவுகூரப்படுவதும் இல்லை. இது மேதினத்தின் உண்மைத்தன்மைக்கு முரணானதாகும்.

தொழிலாளர்கள் அன்று சிந்திய இரத்தத்தையும் பெற்றுக்கொண்ட உரிமையையும் நினைவு கூரும் இத்தினத்தை, தங்கள் நலன்களுக்காக அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளவும் கூடாது. அது தார்மீக ரீதியில் நியாயமானதல்ல. அத்தோடு தங்களது தினத்தின் மூலம் அரசியல் கட்சிகள் அற்ப இலாபம் அடைந்துகொள்ள இடமளிக்கவும் கூடாது. இவ்விடயத்தில் தொழிலாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்காக அத்தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்கங்கள் ஜனநாயக ரீதியிலும், அஹிம்சை வழியிலும் போராட்டம் நடத்துவது தவறில்லை. ஆனால் அத்தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளின் தந்திரவலையில் சிக்கிக் கொள்ளலாகாது. அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் தொழிற்சங்கங்கள் செல்வதற்கு முற்படும் போது, தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளே அமுங்கிப் போவதற்கு இடமுண்டு. நாட்டில் பொருளாதார நெருக்கடி விரைவில் நீங்க வேண்டுமென்பதே ஒவ்வொரு பிரஜையினதும் அவா உள்ளது. அதற்காக தொழிலாளர் சக்தியின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.

அந்த வகையில் நாட்டின் முன்னேற்றத்திலும் சுபீட்சத்திலும் தொழிலாளர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் இந்நாட்டை உண்மையான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு தொழிலாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. தொழிலாளர்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்புக்களும் இன்றி எந்தவொரு நாடும் முன்னேற்றமடைய முடியாது. இந்த உண்மையைத் தொழிலாளர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இதைவிடுத்து தம்மைப் பயன்படுத்தி அற்ப இலாபம் அடைந்து கொள்ள அரசியல் கட்சிகளுக்கு இடமளிப்பதற்கான நேரமும் இதுவல்ல.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதற்காக திடசங்கற்பம் பூணும் நாளாக இந்த தொழிலாளர் தினத்தை தொழிலாளர்கள் அமைத்துக்கொள்ள வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# வறிய மக்களின் துன்பங்களை துடைக்க அயராது உழைத்தவர் அமரர் பிரேமதாச

## இன்று 30 ஆவது சிரார்த்த தினம்



முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் 30 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்.

அவர் 1978 முதல் 1988 வரை பிரதமராகவும்,1989 முதல் 1993 வரை ஜனாதிபதியாகவும் பணியாற்றினார். 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி மேதின பேரணியின் போது புலிகள் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுதாரியால் படுகொலை செய்யப்பட்டார்.

ரணசிங்க பிரேமதாச 1924 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி மத்திய கொழும்பில் உள்ள கெசல்வத்தை என அழைக்கப்படும் வாழைத்தோட்டம் பகுதியில் உள்ள டயஸ் பிளேஸில் பிறந்தார். ரணசிங்க மற்றும் ஜயசிங்க ஆராச்சிகே என்சின ஹாமினே ஆகியோருக்கு ஐந்து பிள்ளைகளில் மூத்தவராகப் பிறந்தார்.

பிரேமதாச தனது ஆரம்பக் கல்வியை ஹார்வர்ட் மெதடிஸ்ட் பெண்கள் பாடசாலை மற்றும் புனித லோரன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் கற்றார்.அவரது கேம்பிரிட்ஜ் உயர் தேர்வு வரையான இடைநிலைக் கல்வி கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் அமைந்திருந்தது. அவர் புறக்கோட்டையில் உள்ள பூர்வாரம விகாரையில் ஹேவாவிதாரண அறநெறி பாடசாலையில் பௌத்த போதனையையும் பெற்றார். தனது 15 ஆவது வயதிலேயே சமூக சேவையில் ஆர்வத்தோடு ஈடுபட்டு 1939 இல் 'சுச்சரித' இயக்கத்தை ஸ்தாபித்தார்.

முன்னோடி தொழிற்சங்கவாதியும் இலங்கை தொழிலாளர் கட்சியின் ஸ்தாபகத் தலைவருமான அலெக்சாண்டர் ஏக்கநாயக்க குணசிங்க மூலமாக பிரேமதாச தொழிற்சங்க இயக்கத்திலும் ஈர்க்கப்பட்டார். ஏ. ஈ. குணசிங்க அவர்களே பிரேமதாசாவுக்கு அரசியல் வழிகாட்டியாகவும் செயற்பட்டார்.

பிரேமதாச அவர்கள் 1946 இல் தொழிலாளர் கட்சியில் முழுநேர உறுப்பினராக இணைந்து கொண்டதோடு,1949 இல் தொழிற்கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.தொடர்ந்து அடுத்த ஆண்டு அவர் கொழும்பு மாநகரசபைக்கு சென் செபஸ்டியன் வட்டார வேட்பாளராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, 1950 இல் கொழும்பு மாநகர சபை உறுப்பினரானார். 1954 இல் மீண்டும் மாநகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட அவர், 1955 இல் கொழும்பு மாநகர பிரதி மேயராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

அவர் ஐ.தே.க.வில் இணைய முடிவு செய்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த சில வாரங்களில் 1956 தேர்தல் அறிவிக்கப்பட்டது. ருவன்வெல்லையில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். அதன் பின்னர் மார்ச் 1960 இல் தேர்தல்கள் நடைபெற்ற போது, மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் இரண்டு வேட்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சி முன்னிறுத்தியது. ஒருவர் டொக்டர் எம்.சி.எம். கலீல், .மற்றையவர் ரணசிங்க பிரேமதாச ஆவார்.

மார்ச் 1960 தேர்தலில் பிரேமதாச கொழும்பு மத்திய தொகுதியில் மூன்றாவது இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜூலை 1960 இல் புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டன.பிரேமதாச தனது விருப்பு வாக்குகளை 35,035 ஆக அதிகரித்தாலும் நான்காவது இடத்தையே அவரால் பெறமுடிந்தது. பிரேமதாச வெறும் மூன்றே மாதங்களில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறினார்.அவர் விரக்தியடைந்தாலும்,கிட்டிய காலப்பகுதிக்குள் நகரசபை அரசியலுக்குத் திரும்பியதோடு 1962 இல் மாநகர உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.அவர் மாநகர சபை உறுப்பினராக இருந்து கொண்டே கொழும்பு மத்திய தேர்தல் தொகுதி முழுவதுமாக கவனத்தை குவிக்க தொடங்கினார்.

ரணசிங்க பிரேமதாச 1964 ஜூன் 23 அன்று தனது 40 ஆவது பிறந்தநாளில் ஹேமா விக்கிரமதுங்கவை மணந்து இல்லற வாழ்வில் இணைந்தார். அமரர் பிரேமதாசாவுக்கு துலாஞ்சலி என்ற மகளும்,தற்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வகிக்கும் சஜித் என்ற மகனும் உள்ளனர்.

1965 இல் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் மத்திய கொழும்பு தொகுதியில் இரண்டு வேட்பாளர்களை நிறுத்தியது.அவர்களில் ஒருவர் ஆர்.பிரேமதாச. அவர் 64,438 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 66 ஆசனங்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, டட்லி சேனநாயக்காவை பிரதமராகக் கொண்டு ஏழு கட்சிகளின் கூட்டணி அரசாங்கத்தை அமைத்தது. ரணசிங்க பிரேமதாச உள்ளூராட்சி பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

1970 மே மாதம் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் பிரேமதாச 69,310 வாக்குகளைப் பெற்று மத்திய கொழும்பில் முதலாம் இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் பிரதமரும் கட்சித் தலைவருமான டட்லி சேனநாயக்க உடல் நலக்குறைவு காரணமாக அவருக்குப் பதிலாக ஜே.ஆர். ஜயவர்தனவை எதிர்க்கட்சித் தலைவராக்கினார். எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவாக ரணசிங்க பிரேமதாச நியமிக்கப்பட்டார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

ஏ.ஜீ . நஸீர் அஹமட்
எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரதானி (தமிழ்) –பாராளுமன்றம்

# குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலனில் அரசாங்கம் விசேட அக்கறை

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத் திட்டத்துடன், குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றம் குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அதற்காக சமூக பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வேலணை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான இலவச அரிசி வழங்கும் இரண்டாம் கட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2022/2023 பெரும் போகத்தில் அரசாங்க அரிசி கொள்வனவு மற்றும் அரிசி கையிருப்பு அகற்றல் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்துடன் இணைந்து இது செயல்படுத்தப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பளை மற்றும் வேலணை பிரதேசங்களை மையமாக வைத்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கை இராணுவத்தின் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான அரிசி விநியோகம் சாகல ரத்நாயக்கவினால் மேற்கொள்ளப்பட்டது.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவித்ததாவது: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமையவே குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏழை மக்களுக்கு நிவாரணமாக அமைந்துள்ள அதேநேரம், நெற்செய்கையாளர்களுக்கு, விளைந்த அறுவடைக்கு உரிய விலை கிடைத்துள்ளது.

இந்த திட்டம் சிறு நெல் ஆலை உரிமையாளர்களையும் வலுவூட்டுவதாக அமையும். இந்த அரிசி விநியோகத்தின் முதல் கட்டத்தை தமிழ்,சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் இரண்டாம் கட்டம் இன்று யாழ். மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படுகின்றது. இராணுவம் தனது கடமைகளை செய்வதோடு, விவசாய வேலைத் திட்டத்திலும் ஈடுபட்டுள்ளமை இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். இத்திட்டத்தில் விளைச்சலுக்காக செலவிடப்பட்ட பணத்தை மீளப்பெற்றுக் கொண்டு எஞ்சியவற்றை வறிய மக்களுக்கு விநியோகிக்க இராணுவம் ஏற்பாடு செய்துள்ளது.

அதன் முதற் கட்டத்தை மாவட்டத்தில் ஆரம்பிப்பதே ஜனாதிபதியின் நோக்கமாக இருந்தது. எனவே இந்த அரிசியை இன்று உங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்த இராணுவம், விமானப்படை, கடற்படை மற்றும் பொலிஸாருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் எமது நாட்டில் முதலில் கொவிட் தொற்றுநோயை எதிர்கொண்டோம். அதன்பிறகு பொருளாதார நெருக்கடியை சந்திக்க வேண்டியிருந்தது. அந்த பொருளாதார நெருக்கடியோடு மக்கள் போராட்டத்தையும் சந்திக்க வேண்டியிருந்தது. உணவு, மருந்துகள், எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது. மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டியதாயிற்று. அப்போது வடக்கு, தெற்கு என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.

அவ்வேளையில் ரணில் விக்கிரமசிங்க, அந்தப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் பொறுப்பை ஏற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அப்போது நாட்டில் ரூபாயைப் போன்று டொலரும் இருக்கவில்லை. நாட்டின் பொருளாதார செயல்முறை வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த அனைத்துப் பிரச்சினைகளாலும் அந்நிய செலாவணி வருமானத்தை இழந்தோம். சுற்றுலாப் பயணிகள் வரவில்லை.

தொழிற்சாலைகளை இயக்க மின்சாரம் இல்லை. போக்குவரத்து முடங்கியது. அன்று ரணில் விக்கிரமசிங்க, நாட்டைப் பொறுப்பேற்ற போது அரச ஊழியர்களின் சம்பளத்தைக் கூட வழங்க முடியாத நிலை நாட்டில் காணப்பட்டது. இன்னும் பத்து நாட்கள் சென்றிருந்தால் நாடு முழுவதுமாக முடங்கிவிடும்.இலங்கை ஒரு தீவு. எங்களால் எல்லையைத் தாண்டி வேறு நாடுகளுக்கு செல்ல முடியாது. எங்கிருந்தும் உணவு கொண்டு வரவும் முடியாது.

(09ஆம் பக்கம் பார்க்க)





யாழ் வேலணையில் நடைபெற்ற குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான இலவச அரிசி வழங்கும் இரண்டாம் கட்ட ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க

# உயிர்த்தியாகத்தினால் வென்றெடுக்கப்பட்ட உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகள்

நாடோடியாக வாழ்ந்து திரிந்த மனிதன் உழைப்பின் மூலமாகவே இன்று நவநாகரிகமாக வாழ்வதற்கு பரிணாமம் அடைந்தான். ஆனால் உழைப்பாளிகளுக்கு அவர்களின் உழைப்புக்கான பிரதிபலன் கிடைக்கிறதா என்பது இன்றளவும் கேள்விக்குறியே ஆகும். எட்டு மணி வேலை, அடிப்படை ஊதியம், தொழிலாளர் வைப்புநிதி, காப்பீடு, பெண்களுக்குப் பணியிடத்தில் கிடைக்கும் உரிமைகள், தொழிற்சங்கங்கள் என இன்று நாம் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளுக்கும் அன்றைய மேதினப் போராட்டமே விதையாக அமைந்தது.

இந்த மே தினத்தின் வரலாற்றை அறிந்துகொள்ள வேண்டியது நம் கடமை. 1800 ஆம் ஆண்டுகளில் தொழில்துறை வளர்ச்சி அடையத் தொடங்கிய காலகட்டத்தில் 20 மணி நேரம் வரை வேலை, உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாமை எனத் தொழிலாளர்கள் பல வகைகளில் சுரண்டப்பட்டனர். இந்தச் சுரண்டலை எதிர்த்து உலகின் பல நாடுகளில் பல போராட்டங்கள் நடைபெற்றன. 1806 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் போராடத் தொடங்கிய போதே, அவர்கள் கடினமாக வேலை வாங்கப்பட்டது உலகுக்குத் தெரியவந்தது

பிலடெல்பியா நகர இயந்திரத் தொழிலாளர்களின் சங்கம் தான் உலகின் முதற் தொழிற்சங்கமாகக் கருதப்படுகிறது. இந்தத் தொழிற்சங்கம் உருவான இரு ஆண்டுகளுக்குப் பின்புதான் இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் உருவாகத் தொடங்கின. அதேபோல பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கையை முதன்முதலாக வைத்த பெருமையும் இச்சங்கத்துக்கே உண்டு. தொடர் போராட்டத்தின் எதிரொலியாக வேன் பியுரன் தலைமையிலான அமெரிக்க அரசு, அரசு ஊழியர்கள் அனைவருக்கும் பத்து மணி நேர வேலை நாள் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களும் பத்து மணி நேர வேலையை வலியுறுத்திப் போராடி அதில் வெற்றியும் கண்டனர்.

இதனைத் தொடர்ந்து குறைந்த வேலை நேரத்துக்கான போராட்டம் எல்லா வளரும் நாடுகளிலும் பரவத் தொடங்கியது. 1858 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் கட்டடத் தொழிலாளர்கள் '8 மணி நேர வேலை, 8 மணி நேரப் பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வு' என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடி அதில் வெற்றியும் பெற்றனர்.

1884 இல் அமெரிக்காவில் 8 மணி நேர வேலையை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டங்களே மே தினம் உருவாவதற்கு நேரடியான காரணங்களாக அமைந்தன. 1884, ஒக்டோபர் 7ஆம் திகதி சிக்காகோவில் நடைபெற்ற மாநாட்டில், அமெரிக்கா மற்றும் கனடா தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில், 1886 ஆம் ஆண்டு மே முதல் திகதி முதல், வேலை நாள் என்பது 8 மணி நேரம்தான் இருக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.






1886 மே முதலாம் திகதி சிக்காகோ நகரில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு 8 மணி நேர வேலைக்காகப் போராடினர். இதனைத் தொடர்ந்து போராடியவர்களைக் கைது செய்தும், அடக்குமுறையைக் கையாண்டும் போராட்டத்தைக் கலைக்க அரசு முயன்றது. 1886 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதியன்று சிக்காகோ நகரில் தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை கேட்டு நடத்திய மகத்தான வேலைநிறுத்தப் போராட்டத்தின் அடையாளமே இன்று உலகம் முழுவதும் மே தினமாக கொண்டாடப்படுகிறது. இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தொழிலாளர் தலைவர்களான அல்பேட் பார்சன்ஸ், ஓகஸ்ட்டு ஸ்பைஸ், ஜோர்ஜ் ஏங் கல், அடால்ப் பிட்சர் ஆகியோர் தங்களது இன்னுயிரை இதற்காக விலையாகத் தரவேண்டியிருந்தது. தொழிலாளர் தலைவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டது.

1886 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதியன்று சிக்காகோ நகரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதன் ஒரு பகுதியாக கார்மிக் ஹார்வெஸ்டர் என்ற கம்பெனியின் முன்னால் திரண்டிருந்த 500 தொழிலாளர்களிடையில் ஓகஸ்டு ஸ்பைஸ் உரையாற்றிக் கொண்டிருந்தார். அமைதியான முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்தக் கூட்டத்தை காவல்துறையினர் கண்மூடித்தனமாக தாக்கினர். இதில் ஒரு தொழிலாளி கொல்லப்பட்டார். ஐவர் படுகாயமுற்றனர். பலர் தாக்கப்பட்டனர்.

இந்த அடக்குமுறையைக் கண்டித்து அன்று இரவு, சிக்காகோ நகரின் மையப் பகுதியில் உள்ள ஹே மார்கெட் என்ற இடத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓகஸ்ட்டு ஸ்பைஸ், அல்பேட் பார்ஸன்ஸ், சாமுவேல் பீல்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறிது நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டதால் இறுதிக் கட்டத்தில் சுமார் 200 தொழிலாளர்கள் மட்டுமே இருந்தனர். சாமுவேல் பீல்டன் பேசிக்கொண்டிருந்த போது, ஜோன்போன் பீல்ட் என்ற அதிகாரியின் தலைமையில், 180 இற்கும் மேற்பட்ட காவல்துறையினர் கூட்டத்தினரை வளைத்து உடனடியாக கலைந்து போகும்படி உத்தரவிட்டனர்.

(09ஆம் பக்கம் பார்க்க)




# மலையக பிரதான அரசியல் கட்சிகளின் மே தின கூட்டங்கள், ஊர்வலங்கள் இல்லை

**தலவாக்கலை குறூப் நிருபர்**

மலையக பிரதான அரசியல் கட்சிகள் இன்றைய மே தினத்தில் பேரணிகள் மற்றும் கூட்டங்களை நடத்தப் போவதில்லைஎனதெரிவித்துள்ளது. அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கம், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஸ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன மே தின கொண்டாட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவதில்லை என தீர்மானித்துள்ளதாக அந்தந்த கட்சி அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். தமது கட்சி மே தினக் கூட்டங்களையோ கொண்டாட்டங்களையோ நடத்தாமல், அதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த தோட்டத் தொழிலாளர்களின் 200 ஆவது ஆண்டு நிறைவை எதிர்காலத்தில் நடாத்த தீர்மானித்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வி.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த மே தினத்தில் பேரணிகளையோகூட்டங்களையோ நடத்தாமல் மாறாக தோட்டங்களுக்குள் சமய நிகழ்வுகளை நடத்துவதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் ஏ. பி. சக்திவேல் கூறினார். தேசிய தொழிலாளர் சங்கம் இந்த ஆண்டு மே தின பேரணிகளையோ கூட்டங்களையோ நடத்தாமல் தோட்டங்களில் சிறு கொண்டாட்டங்களை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் பிராந்திய பணிப்பாளர் என். ஆர். ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

# உழைக்கும் வர்க்க மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலிப்போம்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை முதலாளிகள் என்ற பண முதலைகளும், உழைப்பை சுரண்டிய அதிகார வர்க்கமும் அடக்கி ஆண்ட யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்தது போல, அவர்கள் உழைப்பால் உயர்ந்து உச்சம் தொடுவதற்கு என்றும் நாம் பக்கபலமாக இருப்போம். உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலிப்போம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



அவர் விடுத்துள்ள மேதின வாழ்த்து செய்தியில் மேலும்,...

தொழில்சார் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது மலையக மண்ணில் உயிர் தியாகம் செய்த மலையக தொழிற்சங்க தியாகிகளையும் இந்த உன்னதமான தருணத்தில் நெஞ்சில் இருத்தி நினைவுகூருகின்றேன்.

உழைக்கும் வர்க்கத்தினரின் துயர் துடைக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்று வரை எல்லா வழிகளிலும் போராடியுள்ளது.

இனியும் அதே வழியில் தான் பயணிக்கும். அதுமட்டுமல்ல மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களும் உழைப்பால் உயர்ந்து நிற்பதற்கான சகலவித ஏற்பாடுகளையும் செய்வதற்கு இனிவரும் நாட்களில் முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கப்படும்.

# அடுத்துவரும் மேதினம் மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

நாட்டின் தேசிய வருமானத்தின் பங்காளிகளான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் சமகால பொருளாதார நெருக்கடிக்கு ஈடு கொடுக்கும் வகையில் மேம்படுத்தப்பட வேண்டுமென்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்துக்கள் இருக்க முடியாது.



அதனையே நாமும் வலியுறுத்தி நிற்கிறோம். அடுத்து வரும் மேதினம் மலையகத்தில் மாற்றங்களை ஏபடுத்த வேண்டுமென கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள மேதினச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 200 வருடகாலமாக எமது நாட்டின் தேசிய வருமானத்தில் மிகப்பெரிய பங்களிப்பினை வழங்கிவரும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் பல்வேறு குறைபாடுகளுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இத்தகைய கவலைகள், இன்னல்கள், மற்றும் முட்டுக்கட்டைகளில் இருந்து மலையக சமூகம் விடுபட வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

ஆகவே நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஏற்றவகையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை இந்த மேதினம் உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தொழிலாளர்களின் உரிமைகளுக்காக இ.தொ.கா சமரசமின்றி தொடர்ந்தும் குரல் கொடுக்கும்

உழைக்கும் வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால் தான் உலகமே மகிழ்ச்சியாக இருக்கும்.



உலகத் தொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுத்த தன் அடையாளமாக பிரகடனப்படுத்தப்பட்ட மே தினத்தை கொண்டாடும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள மேதின செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளில், பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகள் மற்றும் வெற்றியை கொண்டாடும் முகமாக மே மாதம் 1ஆம் திகதியை உலகத் தொழிலாளர்கள் நாளாக கொண்டாடுகிறோம்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு தொழிலாளர்கள் தான்.

பாட்டாளி வர்க்கம் மகிழ்ச்சியாக இருந்தால் தான் நாடு வளர்ச்சியடையும். இலங்கையில் பல நூற்றாண்டுகளாக தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் அடிப்படையாக கொண்டே அனைத்து சந்தர்ப்பங்களிலும் செயற்பட்டுள்ளனர்.

அதே வழியில் இ.தொ.கா தொடர்ந்தும் பயணம் செய்யும்.

# 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்பதை உரக்கச் சொல்வோம்

உலகம் முழுவதிலும் உழைக்கும் மக்கள் இன்று தொழிலாளர் தினத்தைக் கொண்டடுகின்றனர். உரிமைகளை போராடி வென்ற உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றும் மே தினத்தில், நாட்டை வளமாக்கும் பாட்டாளி வர்க்கத்தை நன்றியோடு வாழ்த்துகிறேன் என ஜனாதிபதியினால் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியாக தீர்வு காண நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட விசேட குழு உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தனது மேதின வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.



உழைப்பாளர்களாலும், அவர்களின் உழைப்பால் மட்டுமே இந்த உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது என்பதை மே தினம் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்பதை உரக்கச் சொல்லும் பொன்னாளாகவும் இந்த நன்னாள் திகழ்கிறது.

நாட்டின் முதுகெலும்பான தொழிலார்கள் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும்.

எமது அரசாங்கத்தில் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலன்கள் வழங்கப்பட்டாலும் தீர்க்கப்படாத இன்னும் பல பிரச்சினைகள் இருப்பதை மறுக்க முடியாது.

நாம் தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதை உறுதியுடன் கூற விரும்புகின்றோம்.





அப்துல்கலாம் நம்பிக்கை நிதியத்தில் திறம்பட சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு விழா கண்டியன் ரோயல் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது நிதியத்தின் தலைவர் என்.கருணகரன் மற்றும் கண்டி மாவட்ட செயலாளர் சந்திரா தென்னகோன் உட்பட அதிதிகள் வருவதையும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்களையும் படங்களில் காணலாம். படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

# மாத்தளை பாக்கியம் தேசியக் கல்லூரியின் நூற்றாண்டை முன்னிட்டு நடைபவனி

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை பாக்கியம் தேசியக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலை நிர்வாகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் பாடசாலை பழைய மாணவர்களின் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி நேற்று முன்தினம் மாத்தளையில் கோலாகலமாக இடம்பெற்றது.

நடைபவனி பாடசாலை மைதானத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு ராஜ வீதி வழியாக பிரதான வீதி ஊடாக மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

இந்த நடைப்பவனி ஊர்வலத்தில் பாடசாலை பேண்ட் வாத்தியக் குழு, பாடசாலை மாணவிகள் மற்றும் பழைய மாணவிகள், முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக அமைப்புக்கள், மன்றங்கள், ஆலய அறங்காவலர்கள் உட்பட சுமார் 5000 பேர் வரை கலந்து கொண்டனர்.

# இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி நுவரெலியாவில் மேதினக் கொண்டாட்டம்

தோட்ட தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் மற்றும் மலையக இந்திய வம்சாவளி மக்களின் 200 வருட வரலாற்று சிறப்பு ஆகியவற்றை முன்வைத்து இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி மே தினத்தை நுவரெலியாவில் நடத்துகின்றது.

மலையக தோட்டத் தொழிலாளர்களை வழிநடத்தும் தொழிற் சங்கங்கள் பல இம்முறை உழைப்பாளர் தினத்தை தோட்ட வாரியாக நடத்துகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி தொழிலாளர்களுக்கான உரிமைகள் தொடர்பில்



முக்கிய கோரிக்கைகளை மேதின கோரிக்கையாக முன் வைத்து நுவரெலியா நகரில் நடத்துவதாக முன்னணியின் பொது செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

ஆ.ரமேஸ்.

# நுவரெலியா பிலக்பூல் சந்தியில் உல்லாச பயணிகள் பஸ் விபத்து

நுவரெலியா பகுதியிலிருந்து பிலக்பூல் சந்தி ஊடாக உலக முடிவு பகுதிக்கு உல்லாச பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் நேற்று முன்தினம் (29) மாலை வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்ஸின் சாரதி காயங்களுக்குள்ளாகியதுடன் பஸ்ஸில் பயணித்த எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மற்றும் ஏனைய பிரதேசங்களில் இருந்து நானுஓயா, பட்டிபொல வீதி வழியாக ஹோர்ட்டன் உலக முடிவு பகுதிக்கு வாகனத்தில் பயணிக்கும் பயணிகள் நேற்று முன்தினம் மாற்று வழியையே பயன்படுத்தினர்.

விபத்துக்குள்ளான பஸ் பின்னர் அகற்றப்பட்டு வீதியில் வாகனங்கள் பயணிப்பதற்காக வழி செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆ.ரமேஸ்



# பிரகதிசீலி தொழிற்சங்க ஒன்றியம் முன்வைத்துள்ள 2023 மேதின முன்மொழிவுகள்

மனித உழைப்புக்காக விலையை நிர்ணயித்த காலத்திலிலேயே உழைப்பாளர் வர்க்கம் உருவானதோடு உழைப்பை விலைக்கு வாங்கும் எஜமானர்கள் எனப்படும் பணக்கார வர்க்கத்தினர் உருவாகினார்கள்.

தொழிலாளி தனது உழைப்பை விதைத்து மேற்கொள்ளும் உற்பத்தியின் மூலம் கிடைக்கும் இலாபத்தை தன்னுடைய எஜமானனது வாழ்க்கை தன்னிறைவு அடைவதற்கு பயன்படுத்தினாலும், எஜமானர்கள் அநேகமாக தங்களுடைய இலாபத்துக்காகவே நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள்.

அதாவது உழைப்புக்குரிய பெறுமதி எவ்வேளையிலும் கிடைத்ததில்லை.

அதனால் உழைக்கும் அரச ஊழியர்களுக்கு கிடைக்கும் சம்பளம் அந்த உழைப்பின் பெறுமதிக்கு பொருத்தமானதல்ல.தொழிலாளி எவ்வளவு உழைத்தாலும் அதற்கேற்றவாறு வாழ்க்கைத் தரம் உயரவில்லை.

விவசாயிகளுக்கு அவர்களது அறுவடைக்கு சரியான விலைகிடைப்பதில்லை. அலைகடலுடன் போராடும் மீனவருக்கும் நியாயமான விலை கிடைப்பதில்லை. இதனால் எஜமானர்களுக்கும் தொழிலாளருக்கும் இடையே போராட்டம் தொடர்ந்து நிகழ்கின்றது.

இந்த முடிவில்லாத போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாள வர்க்கத்தினர் அனுபவித்த அழுத்தத்தில் இருந்து மீள எஜமானர்களுக்கு எதிராக துணிச்சலுடன் மேற்கொண்ட போராட்டத்தின் விளைவாக அமெரிக்காவின் சிக்காகோ நகரில் ஹேமா கட் சதுக்கத்தில் கி.பி1886 ஆம் ஆண்டில் இரத்தத்தால் நனைந்த தொழிலாளர் போராட்டத்தை நெருப்பால், ஆயுதத்தால் தடுக்க முடியாது என தொழிலாளர்கள் உலகிற்கு எடுத்துக்காட்டினார்கள் அன்றைய தினத்தை மே தினமாக உலகெங்கும் தொழிலாளர்கள் கொண்டாடுவதோடு நாமும் அதனை பெருமையுடன் கொண்டாடுகின்றோம்.

சுயாதீன தொழிற்சங்கமாக பிரகதிசீலி தொழிற்சங்க ஒன்றியம் 2023 ஆம் ஆண்டு மே தினத்தை இலங்கையில் தற்போது காணப்படும் பொருளாதார சிக்கலை நன்றாக உணர்ந்தவர்களாகவே கொண்டாடுகிறோம். அதற்காக குரல் எழுப்ப தொழிற்சங்கம் இச்சந்தர்ப்பத்தில் அர்ப்பணிப்புடன் உள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பிரகதிசீலி தொழிற்சங்க ஒன்றியமாக இந்த மே தினத்தில் தொழிலாளர்களின் வளமான எதிர்காலத்திற்காக இந்த முன்மொழிவுகளை முன் வைக்கின்றோம்.

1. உழைக்கும் மக்கள் வாழ்வதற்கான சரியான வேதனத்தை பெற்றுக் கொடுக்குமாறு கட்டாயப்படுத்துகிறோம்.

2. சுதந்திர வர்த்தக சந்தை முறை மூலம் வர்த்தக சமூகம் மேற்கொண்டு வரும் ஏகப் போக உரிமையை உடைத்து அரசாங்கத்தால் மக்களுக்கு வழங்கும் சலுகைகளை உழைக்கும் வர்க்கத்தார் உள்ளிட்ட நாட்டின் பொது மக்களுக்கு கிடைக்கும் வகையில் அத்தியாவசிய பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய சரியான திட்டத்தை உருவாக்குமாறு கட்டாயப்படுத்துகின்றோம்.

3. அரசு வங்கி இதுவரை காலமும் நாட்டின் பொருளாதார சுமையை தாங்கி மேற்கொண்ட பாரிய சேவைகளை தொடர்ந்து விரிவுபடுத்தி மிகவும் மக்களுக்கு இயைவான மற்றும் திறமையான தேசிய பொருளாதரத்தை வலுப்படுத்துவதற்கு புதிய உலகுக்குப் பொருந்துமாறு அரச வங்கிகளை

வலுப்படுத்துவது போன்று அதனை உறுதிப்படுத்துமாறும் கட்டாயப்படுத்துகிறோம்.

4.கல்வியை உரிமையாக ஏற்றுக் கொள்வதற்கு கட்டாயப்படுத்துவதோடு பிள்ளைகளின் கல்விக்கான அனைத்து தடைகளையும் நீக்கி எதிர்கால உழைப்புக்கான சந்தை தேவைகளை அடிப்படையாகக் கொண்ட கல்வியை எதிர்கால முதலீடு என கருதி பாதுகாப்பான கல்வி முறைமை ஒன்றிற்காக நியாயமான செலவை மேற்கொள்ள கட்டாயப்படுத்துகின்றோம்.

5.சுகாதாரம் மனித உரிமை என ஏற்றுக்கொண்டு தரமான சுகாதார தொகுதி ஒன்றை உருவாக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றோம் .

6.உயர்கல்வியை பெரும் உரிமையை மதித்து அதற்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்துமாறும் அதற்கேற்ற வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள கட்டாயப்படுத்துகிறோம்.

7.விவசாயிகள், மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை நடத்துவதற்கான அடிப்படை வசதிகளை நியாயமான முறையில் பெற்றுக் கொடுக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கவும், அறுவடைக்கான நியாயமான சந்தையை உருவாக்கவும் அதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த கட்டாயப்படுத்துகின்றோம்.

8.ஓய்வூதியக்காரர்களின் பிரச்சினைகள் அறிந்து அவர்களுக்கான நியாயத்தை சமூக பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்கு ஓய்வூதிய நிதியம் ஒன்றை அமைக்குமாறு கோருகிறோம்.

9. போக்குவரத்து துறையில் ஈடுபட்டுள்ள அனைவரின் அபிவிருத்திக்காக தேசிய போக்குவரத்துக் கொள்கை ஒன்றை உருவாக்கி அத்துறையுடன் இணைந்து உழைக்கும் மக்களின் வாழ்க்கை தரத்தை பாதுகாக்க கோருகின்றோம்.

10. நியாயமான வரி கொள்கை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் அதன் மூலம் நாட்டு மக்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் அனைவருக்கும் மக்கள் சேவையை சரியான முறையில் வழங்க கட்டாயப்படுத்துகிறோம்

11. பெருந்தோட்டத்துறையில் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் உழைப்பாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கட்டாயப்படுத்துகிறோம்.

12. ஊழல்,வீண் விரயம், மற்றும் மோசடி போன்ற பொருளாதார கட்டமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக தற்போதுள்ள சட்டத்தை அமுல்படுத்துவதோடு மற்றும் அவை போதியளவில் இல்லையென்றால் புதிய சட்டங்களை விரைவில் அங்கீகரித்து பொருளாதாரத்தை பாதுகாக்க கட்டாயப்படுத்துகிறோம்.

13. நாட்டில் காணப்படும் பொருளாதார பிரச்சினையை ஒழித்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக அரசியலில் உறுதியான நிலைப்பாடு அவசியம் என்பதால் பாராளுமன்றத்தை பிரதிநிதி செய்யும் மற்றும் செய்யாத நாடு ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் தலைமையில் உருவான தேசிய அரசு ஒன்றை ஏற்படுத்த கட்டாயப்படுத்துகிறோம்.

# தொழிலாளர் வர்க்கத்தினரே பொருளாதாரத்தின் முன்னோடி



நாட்டின் பொருளாதார முன்னோடிகளாக உழைத்து களைத்து நிற்கும் உலகத் தொழிலாளர்களுக்கு எனது மேதின நல்வாழ்த்துகளை பரிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உலகப் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக திகழும் தொழிலாளர் வர்க்கத்தை பெருமைப்படுத்தும் நோக்குடன் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் இந்த மே தினத்தைப் பெருமைப்படுத்துவதே எம் அனைவரினதும் உயரிய நோக்கமாகும். உடலை இயந்திரமாக்கி உழைப்பினை உரமாக்கி உலகத்தை இயங்க வைக்கும் தொழிலாளர் வர்க்கமானது என்றுமே போற்றப்படக் கூடியவர்களே.

அவர்கள் சிந்துகின்ற ஒவ்வொரு வியர்வைச் சொட்டுக்களின் மொத்த உருவமே நாட்டின் பொருளாதார முன்னேற்றமாகும். உழைப்பின் முக்கியத்துவத்தை மேலோங்கச் செய்யும் இத்தினத்தில் உலகப் பொருளாதாரத்தில் முன்னோடிகளாக திகழும் தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது இதயத்து வாழ்த்துக்கள்.

# கிழக்கின் குரல்



# காணிகளை அபகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அதிருப்தி தெரிவிப்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட புல்மோட்டை, அரசிமலை, பொன்மலைக்குடா மற்றும் குச்சவெளி பிரதேச காணிகளை அபகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான குழுவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இக்குழுவினர்,இக்காணிகளை அபகரித்து வர்த்தமானி வெளியிட்டமைக்கு அதிருப்தி தெரிவித்தனர்.

குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஏ.முபாறக் விடுத்த வேண்டுகோளுக்கமைய, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் ஏற்பாட்டில், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம் தலைமையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

புல்மோட்டை அரசிமலை, பொன்மலைக்குடா, குச்சவெளி பிரதேசத்திலுள்ள காணிகள் பலவற்றை, தொல்பொருள் திணைக்களம் அபகரித்து, அதற்கான வர்த்தமானியையும் வெளியிட்டிருந்தது. இந்த வர்த்தமானி வெளியானதையடுத்து அப்பிரதேச மக்கள் பெரும் அதிருப்தயில் உள்ளனர்.

இது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை பற்றியும், திருமலை மாவட்டத்தின் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் பின்னர், அபகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்து,காணி திட்டமிடல் குழுவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை

வழங்கியதுடன், காணிகளை மீள ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதில்,ஜனாதிபதி உறுதியுடனுள்ளதாக குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

# கல்முனை வடக்கு சுகாதார பிரிவில் டெங்கு விழிப்புணர்வு

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் டெங்கு விழப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.ரமேஸ் வழிகாட்டலில் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்பு செயலணிக் குழுவினர் இணைந்து இச்செயற்பாடுகளை முன்னெடுத்தனர். சுற்றுப்புறங்களை அசுத்தமாக வைத்திருந்தோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் இதில் கவனம் செலுத்தப்பட்டது.

கல்முனை பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இடையிடையே கடும் மழை பெய்துவருவதால், டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலமாவை கௌரவிக்கும் நிகழ்வு



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

கல்முனை அல்ஹாமியா அரபுக் கல்லுரியில் மௌலவியாக பட்டம் பெற்று வெளியேறிய அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.அனஸ் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மேலும், அனஸ் மௌலவியின் முதலாவது ஜும்ஆ உரையும் கடந்த வெள்ளிக்கிழமை (28) ஹுதா ஜும்ஆ பள்ளிவாசலில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.அனஸின் (ஹாமி) தந்தை முஹம்மட் அபூபக்கர் முன்னிலையில், பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் மௌலவிக்கு நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# எந்த நெருக்கடியை எதிர்கொண்டாலும் கல்வி அபிவிருத்தியை அரசு கைவிடாது

## ராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதில், கூடிய கரிசனை காட்டி வருவதாக கல்வி ராஜாங்க அமைச்சர் எஸ். அரவிந்த குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு நிகழ்வில், பிரதம அதிதி யாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார் .இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் பொருளாதாரம் துரித வளர்ச்சி கண்டு வருகிறது.

இந்நிலைமைக்கு வித்துட்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அரசாங்கம் கவிழப்போவதாக எதிர்க்கட்சிகள் நப்பாசையூட்டி வருகிறது.

இதை, நம்புமள வில் மக்கள் இல்லை. அரசாங்கத்தின் ஸ்திரத்தை ஆளுந்தரப்பினராகிய எங்களாலாயே உணர முடியும்.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கல்வி அபிவிருத்திக்கு அரசாங்கம் உதவுகிறது.

பாராளுமன்றம் 2025 ஆண்டில் கலையவுள்ளது. இந்த போதியளவான காலத்துக்குள் கல்வி அபிவிருத்தியில் பாரிய முன்னேற்றங்கள் செய்யப்படும் என்றார்.

# சம்புநகர் அல்மினாவில் வித்தியாரம்ப நிகழ்வு



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று கல்வி வலயதிற்குட்பட்ட அட்டாளைச்சேனை சம்புநகர் அல்மினா வித்தியாலயத்தில் முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் "வித்தியாரம்ப விழா" பாடசாலை வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

தரம் ஒன்றுக்கான ஆசிரியர் எம்.ஏ.ஏ. அசீசின் நெறிப்படுத்தலின் மூலம் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஆரம்பப் பிரிவிற்கான சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் எஸ்.எல். மன்சூர் பிரதம அதிதியாகவும், பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தரும், சேவைக்கால ஆசிரியர் ஆலோசகருமான எம்.எச்.ஹம்மாத், இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் ஏ.பீ.கமால்டின் கௌரவ அதிதிகளாகவும், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் ஏ.கே.றிஸ்னா, சிரேஷ்ட ஆசிரியர் எம்.எச்.அப்துல் ஹை, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.ஏ.எம். அறூஸ், ஏ.ஜீ.ஹம்சார் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக அதிதிகளை வரவேற்கும் நிகழ்வைத் தொடர்ந்து, இரண்டாம் தர மாணவர்கள் முதலாம் தர மாணவர்களுக்கு மாலை அணிவித்தும் "பூக்கள்" தூவியும் வரவேற்றனர்.

பின்னர் புதிய மாணவர்கள் பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, இனிப்புப்பண்டங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பல்கழைக்கழக மாணவி திடீர் மரணம்; பல கோணங்களில் துரித விசாரணை

**மண்டூர் தினகரன் நிருபர்**

வைத்தியசாலையில் அனுமிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். உதயபுரம் பெரியகல்லாறு02 சேர்ந்த (23) வதுடைய ஆனந்தன் டென்சிகா என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகல்லாற்றில் இச்சம்பவம் (29) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் பயிலும் இம்மாணவி, கடந்த இரு வாரங்களாக விடுமுறையில் தனது வீட்டிலிருந்துள்ளார். சம்பவ தினத்தன்று தனது தாயாருடன் கடைக்குச் சென்று பழங்கள் வாங்கி வந்து உண்ட பின்னர், படுக்கை அறையில் நித்திரை செய்து கொண்டிருந்த போது மயக்கமுற்றுள்ளார். இதை அவதானித்த குடும்பத்தினர் கல்லாறு வைத்தியசாலையில் அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர்.இதன்போது சிகிச்சைப் பலனின்றி இம்மாணவி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரமபக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை பார்வையிட்ட நீதவான்,பிரேதத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பரிந்துரைத்தார்.

# பத்து மில்லியன் ரூபா பெறுமதியில் 6600 புத்தகங்கள் அன்பளிப்பு



**இறக்காமம் தினகரன் நிருபர்**

சர்வதேச புத்தக தினத்தையொட்டி அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பொது நூலகங்களுக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான நூல்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கோட்போர் கூடத்தில் (28) இடம் பெற்றது

அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஆசியா பவுண்டேஷன் புத்தக விநியோகத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் அன்ரன் நல்லதம்பி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 53 பொது நூலகங்களுக்கு 10 மில்லியன் ரூபா பெறுமதியான 6600 புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

# கோரளைப்பற்று மத்தியில் பெருநாள் கலாசார விழா



**கல்குடா தினகரன் நிருபர்**

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்திப் பிரிவு ஏற்பாடு செய்த நோன்பு பெருநாள் கலாசார விழா,கடந்த சனிக்கிழமை மாலை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எஸ்.ஏ.பஷீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எஸ்.எச் முசம்மில் கலந்து கொண்டார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய அதிகாரிகள், பௌத்த, இந்து, இஸ்லாமிய சமய தலைவர்கள், கோறளைப்பற்று மத்தி சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல்.ஏ.மஜீத், வங்கி முகாமையாளர் எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களான தேங்காய் திருவுதல், பனிஸ் சாப்பிடல், யானைக்கு கண்வைத்தல், கயிறிழுத்தல், சங்கீத கதிரை, அபிநய பாடல், கிராமிய அழகு ராணி, வெளியில் பந்து போடல், கிடுகு இழைத்தல் போன்ற சுவாரஸ்யமான போட்டிகள் இடம் பெற்றன.

# கால்நடைகளால் பெரும் சிரமம்

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச வீதிகளில்; கட்டாக்காலி ஆடு, மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

பிரதான வீதிகளில் மாத்திரமன்றி உள்ளக வீதிகளிலும் கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறு வீதிகளில் இவை,அலைந்து திரிவதால் விபத்துக்கள் ஏற்படுவது மட்டுமன்றி வியாபாரிகளும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மரக்கறிகள் மற்றும் பழ வகைகளையும் இந்தக் கட்டாக்காலி கால்நடைகள் தின்று தீர்ப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி நிர்வாகங்கள் கலைக்கப்பட்டுள்ளதால் உரிய அதிகாரிகள் கவனமெடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு நிபுணர்களின் பங்களிப்பும் அவசியம்

**ஒலுவில் விசேட நிருபர்**

நாட்டின் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி பெரும்பங்கு வகிப்பதாக. தென்கிழக்குப் பல்லைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இலங்கைப் பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் 45 ஆவது கூட்டம் வெள்ளிக்கிழமை (28) தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. ஒலுவில் வளாக தொழில்நுட்ப பீடத்தின் கேட்போர் கூடத்தில் பொருளியலாளர்கள் மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம் முஸ்தபா தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது, இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் சகல துறைகளையும் பாதித்துள்ளன. தென்கிழக்குப் பிராந்தியத்தின் விவசாயம், மீன்பிடி துறைகளும் பெரும் சவால்களை எதிர் நோக்கியுள்ளன . பிராந்திய பொருளாதார மேம்பாட்டிற்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகம் பெரும்பங்கு வகிக்கின்றது.

பொருளாதார நெருக்கடி சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு பல்கலைக்கழக பெருளியல் நிபுணர்கள் முக்கிய பங்களிப்புச் செய்ய வேண்டும் இதற்கு பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் பணி அவசியமாகும் என்றார்.

இதில்,நெதர்லாந்து சமூக கற்கைகள் நிறுவனத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் கலாநிதி ஹாவாட் நிக்கலஸ் முதன்மைப் பேச்சாளராக நிகழ்நிலை தொழிநுட்பத்தினூடாக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம் பாஸில் இலங்கைப் பல்கலைக்கழக பொருளியலாளர்கள் மன்றத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் குணரூபன், இலங்கை பல்கலைகழகங்களின் பெருளியல் துறை நிபுணர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், நூலகர், துறைசார் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வறிய மக்களின் துன்பங்களை துடைக்க... (06ஆம் பக்கத் தொடர்)

ஜே.ஆர் ஜயவர்த்தன பிரேமதாசவிடம், யூ.என்.பி.யை பரந்து விரிந்து சாமானியர்களின் கட்சியாக மாற்றும் பிரேமதாசவின் விருப்பத்துடன் தான் உடன்படுவதாக கூறினார். இதில் தன்னுடன் கைகோர்க்குமாறு பிரேமதாசவிடம் கோரிக்கை விடுத்தார். பிரேமதாச ஜே.ஆரின் உண்மையான அழைப்பை ஏற்று ஏற்றுக்கொண்டார்.

பல்வேறு பொருளாதார மற்றும் சமூகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர். ஐ.தே.கட்சி மக்களின் கட்சியாக மாறியது. இடைத்தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து வெற்றிபெறத் தொடங்கியது.

ஐ.தே.க 1977 ஜூலையில் பாராளுமன்றத்தில் 168 ஆசனங்களில் 141 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாறு காணாத வெற்றியை ஈட்டியது. பிரேமதாச 94,128 வாக்குகளைப் பெற்று மத்திய கொழும்பில் முதலாவது இடத்தைப் பிடித்து பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.ஜே.ஆர்.ஜயவர்தன பிரதமரானார். பிரேமதாச உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். சபை முதல்வராகவும் ஆக்கப்பட்டார்.

குடியரசு அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், ஜே.ஆர்.ஜயவர்தன 1978 இல் ஜனாதிபதியானார். பிரேமதாச பிரதமரானார்.1978 முதல் 1988 வரை பிரதமராக பதவி வகித்தார்.

1988 செப்டம்பரில் தான் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக ஜே.ஆர் அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நாடாளுமன்ற குழுவும் செயற்குழுவும் கூட்டப்பட்டு வேட்பாளரை முடிவு செய்வதற்கான உட்கட்சித் தேர்தலுக்குப் பதிலாக,ஜே.ஆர் ரணசிங்க பிரேமதாசவின் பெயரை ஜனாதிபதி வேட்பாளராக முன்மொழிந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தினார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணசிங்க பிரேமதாச இவ்வாறு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் 19 டிசம்பர் 1988 அன்று நடைபெற்றது. கடும் போட்டியின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணசிங்க பிரேமதாச 2,569,199 (50.43%) வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்தார். இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாச தெரிவு செய்யப்பட்டார்.

பிரேமதாச இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்கும் போது அவருக்கு வயது 65 ஆகும். அவரால் நான்கு வருடங்கள் நான்கு மாதங்கள் மட்டுமே ஜனாதிபதியாக தனது கடமைகளை நிறைவேற்ற முடிந்தது.

இன்று போல் ஓர் தினத்தில் கட்சியின் மே தின ஊர்வலத்தின் போது ரணசிங்க பிரேமதாச 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி பிற்பகல் 12.45 மணியளவில் கொழும்பு கிராண்ட்பாஸ், ஆர்மர் வீதி சந்தியில் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

அவர் மரணமடைந்து 30 வருடங்கள் கடந்த போதிலும், அன்னார் வறிய மக்களுக்காக ஆற்றிய பணிகள் மக்கள் உள்ளங்களில் இன்னும் நிலைத்து நிற்கின்றன.

## குறைந்த வருமானம் பெறும் மக்களின்... (06ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைவராக பொறுப்பேற்று ஒரு சில நாட்கள் செல்வதற்கு முன்னரே நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. மேலும் அப்போது நிலவிய பல பிரச்சினைகள் ஒவ்வொன்றாகத் தீர ஆரம்பித்தன. முக்கியமாக எரிவாயு, உணவு மற்றும் எரிபொருள் ஆகியவற்றை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேநேரம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த தேவையான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் உடன்படிக்கைக்கு வந்தது. அந்த ஒப்பந்தத்தை உருவாக்குவது எளிதான காரியம் அல்ல. பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற முடியாமல் தவிக்கும் பிற நாடுகளும் உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு, முதலில் சர்வதேச நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியது அவசியம். அந்த நம்பிக்கையின் காரணமாகவே தற்போது சர்வதேச சமூகம் எம்முடன் இணைந்து செயற்படுகின்றது. வெளிநாட்டினர் நம் நாட்டிற்கு வருகிறார்கள். நாடு படிப்படியாக ஸ்திரம் அடைந்து வருகிறது. ஒரு அடி கூட பின் வாங்காமல் முன்னோக்கி செல்லும் வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டை சரியான முறையில் ஆட்சி செய்வதற்கான பின்னணியை ஜனாதிபதி தற்போது தயாரித்துள்ளார்.

அத்துடன், வடக்கில் விவசாயம் மற்றும் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்து மக்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்கம் பற்றி நீண்ட நாட்களாக பேசப்பட்டு வருகிறது. நல்லிணக்கம் பற்றி பேசியது போதும். இப்போது அந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது. காணாமல் போனவர்களை கண்டறியும் நடவடிக்கையை வலுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், மக்களின் வறுமையை அகற்றவும் சமூக பாதுகாப்பு திட்டம் கட்டமைக்கப்படும்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"ஜனாதிபதியின் ஆலோசனையின் அடிப்படையில், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தலா பத்து கிலோ அரிசி வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டம் இன, மத பாகுபாடின்றி செயல்படுத்தப்படுகிறது. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள விவசாயிகளின் நெல்லுக்கு உத்தரவாத விலையை வழங்குவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். நாடு கடுமையான நெருக்கடியில் இருந்தபோது, நாட்டை மீட்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒட்டுமொத்த மக்களும் நன்றி கூற வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட ஒன்றிணைய வேண்டும் என நான் அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றேன்".

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளையில்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ரணில் விக்கிரமசிங்கவிடம் நாடு கையளிக்கப்பட்டதால் பொருளாதாரத்தை நல்லதொரு நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது. மேலும் அப்போது யாழ்ப்பாணம் மக்கள் மிகவும் கவனமாக நடந்து கொண்டார்கள். சமுர்த்தி குடும்பங்களுக்கு மாத்திரமன்றி வறுமையில் உள்ள குடும்பங்களுக்கும் புத்தாண்டுக்கும் புத்தாண்டுக்குப் பின்னரும் அரிசி வழங்க ஜனாதிபதி தீர்மானித்தார்".

இந்நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, யாழ் பாதுகாப்புப் படை கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதோட்ட மற்றும் முப்படை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## உயிர்த்தியாகத்தினால் வென்றெடுக்கப்பட்ட... (06ஆம் பக்கத் தொடர்)

சிறிது நேரத்தில் அங்கு கலவரம் வெடித்தது. அப்போது திடீரென்று காவல்துறையினர் மீது ஒரு கைக்குண்டு வந்து விழுந்தது. அதில் ஒருவர் உயிரிழந்தார். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இதனை தொடர்ந்து காவல்துறையினர் துப்பாக்கியால் கூட்டத்தை நோக்கிச் சுட்டனர். இதில் பல தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இந்தக் கலவரத்தை காரணம் காட்டி தொழிலாளர்களின் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

1886 ஆம் ஆண்டு மே 1 ஆம் திகதி கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாக நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, 1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி அவர்கள் தூக்கிலிடப்பட்டனர். மேற்கண்ட நான்கு பேருடன், அடால்ப் பிட்சர், மைக்கேல் ஸ்வார்ப், சாமுவெல் பீல்டன், லூயிஸ் லிங்க் மற்றும் ஒஸ்கர் நீப் ஆகியவர்களும் வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒஸ்கர் நீப் என்ற என்பவருக்கு 15 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. மற்றவர்களுக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு உலகம் முழுவதும் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. ஆங்காங்கே போராட்டங்கள் நடைபெற்றன. இதன் விளைவாக ஸ்வார்ப் மற்றும் பீல்டன் ஆகியோருக்கு மரணதண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

தொழிலாளர் தலைவர்களான அல்பேட் பார்சன்ஸ், ஓகஸ்டு ஸ்பைஸ், ஜோர்ஜ் ஏங்கல், அடால்ப் பிட்சர், ஆகியோர் 1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று தூக்கிலிடப்பட்டனர். லூயிஸ் லிங்க் என்பவர் சிறையிலேயே தன்னைத்தானே மாய்த்துக் கொண்டார். சிக்காகோ நகர தொழிலாளர்களுக்கு 8 மணி நேரம் வேலை கேட்டு நடைபெற்ற போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தியவர்களில் முதன்மையானவர் ஒகஸ்டு ஸ்பைஸ் ஆவார்.

காவலர்கள் மீது வீசப்பட்ட குண்டு தன்னால் உண்மையில் வீசப்பட்டிருந்தால் அதை நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்வதில் தனக்கு எந்தவித தயக்கமும் கிடையாது என்று அவர் தைரியத்தோடு உரைத்தார். மற்றொரு தொழிலாளர் தலைவரான அல்பேர்ட் பர்ஸன் நீதிமன்றத்தில் வாதாடுகையில், மரம் கனிகளால் அறியப்படுவதைப் போல் தொழிலாளர்கள், போர்க்குணம் மற்றும் தியாகத்தின் மூலம் தங்களது உண்மையான தலைவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். தங்களுக்கு அளிக்கப்படும் மரணதண்டனை தீப்பொறியாக உலகம் முழுவதும் பரவும் என ஆர்ப்பரித்தார். ஒஸ்கர் நீபி என்பவர், கலவரம் விளைவிக்கப்பட்ட இடத்தில் நடந்த கூட்டத்திற்கு தான் தலைமை வகித்தேன் என்ற உண்மையை இந்த நீதிமன்றத்தில் ஒப்புக் கொள்வதாகவும், 8 மணி நேரம் வேலை கேட்டு போராடிய தொழிலாளர்களுக்கு நான் தலைவன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுவதாகவும் உரைத்தார்.

அடால்ப் பிட்சர் என்பவர் நீதிமன்றத்தில் உள்ள காவலர்களைப் பார்த்து எள்ளி நகையாடி "இவர்களா சட்டத்தின் காவலர்கள்? இவர்கள் திருடர்கள். அடுத்தவர்களின் சொத்தினை அபகரிப்பவர்கள்" என எக்காளமிட்டார்.

மைக்கேல் ஸ்வாப், நீதிமன்றத்தில் தங்களுடைய நோக்கம் கலகம் விளைவிப்பது அல்ல, சமஉரிமையை அடைவதே என்று பிரகடனப்படுத்தினார்.

ஜோர்ஜ் ஏங்கல், தொழிலாளர்களின் தேவை, வேலை, ரொட்டி, அமைதி ஆகிய மூன்றும்தான். இது கூட இவர்களுக்கு இன்று உத்தரவாதப்படுத்தப்படவில்லை என்று முழக்கமிட்டார். காவல்காரர்களே குண்டு வீசி சதி செய்து, தங்கள் மீது குற்றம் சுமத்தி மரணதண்டனை வழங்க திட்டமிட்டுள்ளார்கள் என்று தெரிந்திருந்தும், மே தின தியாகிகள் சிறிதும் அஞ்சவில்லை. நீதிமன்றத்தில் வாதாடுவது மூலம் தாங்கள் தண்டனையிலிருந்து தப்பமுடியும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்தக் கொலைக் களத்தையும் பிரசார மேடையாக பயன்படுத்தி முதலாளித்துவத்தின் முகமூடியை கிழித்தெறிந்து நீதிமன்றத்தில் அவர்கள் ஆற்றிய உரையையும், ஆதிக்க சக்திகளின் திணறலையும், வரலாற்று ஆவணமாக மாற்றிய அவர்களின் வீரத்தையும் போற்றிப் பாராட்ட வார்த்தைகளே இல்லை. எதிர்பார்த்தது போலவே அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. தீரத்துடன் போராடிய அவர்களுக்கு கிடைத்த மரணதண்டனையே முதலாளித்துவத்திற்கு அடிக்கப்பட்ட முதல் சாவுமணியாக மாறியது. அவர்களின் மரணமே உலகத் தொழிலாளர்களை ஒன்று சேர்த்திடும் மகத்தான சக்தியாகவும் உழைப்பாளர்கள் கொண்டாடி மகிழும் மே தினமாகவும் இன்று உருவெடுத்துள்ளது.

தற்போது 80 இற்கும் அதிகமான நாடுகள் மே மாதம் முதலாம் திகதியை தேசிய விடுமுறையாக அறிவித்துள்ளன. போராடிப் பெற்ற உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்வது எவ்வாறு தொழிலாளர் உரிமையோ, அதேபோல அவற்றைத் தக்க வைப்பதும் தொழிலாளர்களின் கடமையாகும்.


## பொது மக்களின் அபிவிருத்தி முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில்

## ஹாலிஎல பிரதேச சபை

2024 ஆம் ஆண்டை முன்னிறுத்தி தயாரிக்கப்பட்ட மூலதனச் செலவை மதிப்பீட்டுக்கு மற்றும் அபிவிருத்தி திட்டத்திற்கு உள்ளடக்குவதற்காக ஹாலிஎல அதிகார எல்லையில் பொதுமக்களின் அபிவிருத்தி முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அதற்கு தொடர்புடைய முன்மொழிவுகளை 2023 ஜூன் மாதம் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் சபை செயலாளர், ஹாலிஎல பிரதேச சபை, ஹாலிஎல என்ற முகவரிக்கு அனுப்பும்படி பொதுமக்களிடம் இத்தால் கோரப்படுகிறது.

**சபை செயலாளர்,**
**ஹாலிஎல பிரதேச சபை, ஹாலிஎல**
**தொ.பே.: 055-2294275/ 055-2295075**



## 1964 இலக்கம் 28 இனையுடைய காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டவாறு காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் கோப்பிலக்கம் - BOP/4/4/1-90

காணி அமைச்சின் கோப்பிலக்கம் -4-3/3/2021/PI/154

இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசினால் எடுத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்காக 2324/19ஆம் இலக்க மற்றும் 2023.03.21ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

| | | |
|---|---|---|
| மாவட்டம் | - | காலி |
| பிரதேச செயலகப் பிரிவு | - | போபே - பொந்தல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - | இலக்கம் 117A, மீபாவல |
| கிராமத்தின் பெயர் | - | மீபாவல |
| காணியின் பெயர் | - | உஸ்கொடவில |
| திட்டவரைபட இலக்கம் | - | 810169, தொகுதி இல. 01, தாள் இல 1 |
| துண்டு இலக்கம் | - | 01 |

**எடுத்துக்கொள்ளல் உத்தியோகத்தர்/**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**போப்பே போத்தல்.**

**திகதி - 2023.04.21ஆந் திகதி**
**முகவரி - பிரதேச செயலகம்,**
**போபே- போத்தல,**
**காலி மாவட்டம்.**



பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள ரங்கல, ஹுன்னஸ்கிரிய மற்றும் மிட்லன்டிஸ் ஆகிய தோட்டங்களில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு வெளியிட்ட வழிகாட்டலுக்கு அமைய அடையாளம் காணப்பட்ட குறைவாகப் பயன்படுத்தப்பட்ட எனினும் பயிரிடுவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள 82.25 ஹெக்டயர் அளவான காணியை பயிரிடும் திட்டத்திற்காக குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| தோட்டம் | காணி அளவு | மாவட்டம் |
|---|---|---|
| ரங்கல | 52.25 | கண்டி |
| ஹுன்னஸ்கிரிய | 06 | மாத்தளை |
| மிட்லன்ட் | 24 | அதுவே |

**எதிர்பார்க்கப்படும் பயிர் திட்டம் -**

- தமது விருப்புக்கு அமைய விவசாய பயிர்ச்செய்கைகளுக்காக திட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்க முடியும் என்பதோடு தேயிலை பயிர்ச்செய்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- காணியை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கு 2 – 45 ஏக்கர் வரையான அளவை விண்ணப்பிக்க முடியும் என்பதோடு வழங்கப்படும் காணி அளவு தாம் மேற்கொள்ள எதிர்பார்க்கும் திட்டத்திற்கு அமைய மாறுபடும்.

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற முதலீட்டாளர்களுக்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்க முடியும். குறித்த விண்ணப்பம் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய விபரக் குறிப்பு ஆவணம் இலக்கம் 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் மற்றும் பன்விலவில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். 2023.05.08ஆம் திகதி தொடக்கம் 2023.05.29ஆம் திகதி வரை ரூபா 5000 பணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2023.05.30 ஆகும் என்பதோடு பிற்பகல் 2.00 வரை விண்ணப்பங்கள் கீழுள்ள முகவரியில் அமைந்திருக்கும் தலைமை அலுவலகத்தில் ஏற்கப்படும். இந்தக் காணிகளை குத்தகைக்கு விடுவது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை வசமானது.

**தலைவர்**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு 10**
**தொ. இலக்கம் 0114194501/ 0114194875**



# பெறுகை அறிவித்தல்

## கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் கட்டிட பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023/2024

முல்லேரியா, கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023.05.25ம் திகதி மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்கப்படும். ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விகள் திறக்கப்படும். அத்துடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையில் இடது பக்க மேல் மூலையில் **"கட்டிட பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023/2024"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2023.04.29 முதல் மேற்படி முகவரியில் சாதாரண அலுவலக நேரம் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரர்கள் தமது தகைமையை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் கேள்வி கட்டணத்தைச் செலுத்துதல் சார்பாக கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் கணக்காளரால் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

இரு பிரதிகளுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

| தொடர் இல. | உருப்படி | தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01 | 2023/2024ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலை சார்பாக கட்டிட பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் (ரூ. 300,000.00) மேற்படாத ஒப்பந்தங்கள் | C09 (திருத்தப்பட்ட பதிவு செய்தல் முறைமையின் பிரகாரம்) EM5 மற்றும் அதற்கு மேல் | ரூ. 1,000.00 |

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பணிப்பாளர், கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை (தொ.பே.இல. 011-2578226) ஐ அழையுங்கள். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை,**
**முல்லேரியா புதிய நகரம்.**
2023.04.26



CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
## கமத்தொழில் அமைச்சு
## தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்
## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயதிட்டம் (CSIAP)

**IDA Credit No.: P163742**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயதிட்ட (CSIAP) ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து(IDA) – உலகவங்கி - கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணையின் ஒப்பந்தங்களின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பண்டங்களின் பெறுகைக்காக காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயதிட்டத்தின் சார்பாக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா மாகாண சிறியளவிலான செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**ஒப்பந்தப் பெயர்:**
உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயதிட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் 21500 கி.கி. பயறு மற்றும் 700 கி.கி. கௌபி இடைபருவக்கால 02 திட்டத்தின் கீழான பெறுகை. ஒப்பந்த இலக்கம்: LK-MOA-333991 GO-RFB/UP/DPDO/Seeds (06)/2023/14

| தொகுதி இல. | விளக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபாவில்) | விலைமனுப்பிணையின் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 01. | 21500 கி.கி. பயற்று விதைகளை வழங்கல் | 8,000 | 500,000 இ.ரூபா. 2023.10.18 ஆம் திகதியன்று வரையும் |
| 02. | 700 கி.கி. கௌபி விதைகளை வழங்கல் | | 30,000 இ.ரூபா. 2023.10.18 ஆம் திகதியன்று வரையும |

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
4. விலைமனுதாரர் ஒரே விலைமனுவில் ஒன்றுக்கு அல்லது மேற்பட்ட தொகுதிகளுக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டிருந்தால் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம் ஆனால் விலைமனுதாரரின் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தகவுத்திறன், நிதியிடல் மற்றும் ஏனைய திறன் மட்டுப்படுத்தல்கள் அடிப்படையிலேயே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வெள்ளவாய, குமாரதாச மாவத்தை, வேவலவத்த, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.:/ தொலைநகல் இல.: 055-2280334) 2023 மே 02 ஆம் திகதியிலிருந்து 2023 மே 22 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடத்தில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2023 மே 02 ஆம் திகதியிலிருந்து 2023 மே 22 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்காக தயவு செய்து மேலேயுள்ள அட்டவணையை பார்வையிடவும்) ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்திய பின்னர், மேலேயுள்ள 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், சித்திகரமான விலைமனுதாரர் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும். இலங்கையின் அரசிற்கு உரிமையான தொழில்முயற்சிகள் அல்லது நிறுவனங்கள் போட்டியிடுவதற்கான தகுதியைக் கொண்டுள்ளதுடன் பின்வருவனவற்றை பூர்த்தி செய்தால் மாத்திரமே ஒப்பந்தங்கள் வழங்கப்படும் (1) சட்ட ரீதியாகவும் நிதியிடல் தொடர்பாகவும் தன்னிச்சையாகவிருத்தல் (2) நாட்டின் வர்த்தக சட்டத்தின் கீழ் செயற்படல்.
8. மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இடத்தில் 2023 மே 11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது ஒழுங்கு பண்ணப்படும். வளமுள்ள விலைமனுதாரர்கள் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு முன்னராக விஷேடமாக விபரக்குறிப்புக்கள், ITB, மற்றும் ஒப்பந்த தரவு ஆகியவற்றுடன் நன்றாக தம்மை பரிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
9. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தில் விதிக்கப்பட்ட உருமாதிரியில் நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்களை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறிந்துரைக்கப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுவும் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முறையே ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்படல் வேண்டும். இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு பண்டங்களின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2023 மே 23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், சிறியளவிலான செயற்றிட்ட பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்), வேவலவத்த, குமாரதாச மாவத்தை, வெள்ளவாய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஒப்படைக்கப்படல் வேண்டும்.
12. விலைமனுக்கள் 2023 மே 23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**சிறியளவிலான செயற்றிட்ட பெறுகைக் குழு (ஊவா மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம்,**
**செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்),**
**வேவலவத்த, குமாரதாச மாவத்தை, வெள்ளவாய.**
**திகதி: 2023.04.26**

# சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு



302 வீட்டு வேலையாள்/ சேவைகள்
பொதுவான சேவைகள்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் செப்/குக் (ஆண்) மலேசியா. உடன் புறப்படலாம். தயவு செய்து மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள். ஃப்ரீ கோல்ட் வே வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர், சுபுதிபுர, பத்தரமுல்ல. தொ.பே. இல. 011 2187267/ 071 4042613 026045

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# அறிவித்தல்!

**வீதிகளுக்கிடையிலான போக்கவரத்து அதிகாரசபை - மேல் மாகாணம்**

## பயணிகள் போக்குவரத்து சேவை முச்சக்கர வண்டி பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்

மேல் மாகாண சபையின் 2002 இல 06 வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து முச்சக்கரவண்டி சேவை விதியின் 16ம் பிரிவின் விதிமுறைகளின் பிரகாரம் 2021 டிசம்பர் 15ம் திகதி இல. 2258/25 வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிகளின் மூலம் மேல் மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள முச்சக்கரவண்டி மற்றும் அவற்றின் சாரதிகள் அதனோடு சம்பந்தப்பட்ட கட்டணங்களை செலுத்தி இவ் அதிகார சபையின் பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அதனடிப்படையில், மேல் மாகாணத்திற்குள் கட்டணமொன்றை அல்லது அனுகூலமொன்றை எதிர்பார்த்து பயனிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற சகல முச்சக்கரவண்டி மற்றும் அவற்றில் சேவையில் ஈடுபடும் சாரதிகள் பதிவுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஒன்லைன் முறை ஊடாக 2023 ஜுலை 31ம் திகதிக்கு முன்னர் www.wptaxi.lk இணைய தளத்திற்கு பிரவேசித்து மேற்கொள்ளுமாறு சகல முச்சக்கர வண்டி உரிமையாளர்கள்/ சாரதிகளிடம் இத்தால் அறிவிக்கிறேன்.

ஒன்லைன் வழியாக பதிவு செய்து போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு சிரமமுடைய முச்சக்கர வண்டி உரிமையாளர் மற்றும் சாரதிகளுக்கு 2023 மே 02ம் திகதி முதல் கீழ்க்காணும் முகவரிகளில் அமைந்துள்ள பிரதேச அலுவலகங்களில் தமது குறித்தவிடயங்களை மேற்கொள்வதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. பெஸ்டியன் மாவத்த பிரதான பஸ் நிலையம், புறக்கோட்டை, கொழும்பு-11. - 0112424721
2. பொரளை பஸ் நிலையம், பொரளை, கொழும்பு-08. - 0112687327
3. இல. 166/15, 3ம் மாடி, சொய்சாபுர, மொறட்டுவை - 0112635273
4. புதிய பஸ் நிலையம், ஹோமாகம - 0112098320
5. இல. 161, பழைய நீர் கொழும்பு வீதி, கனுவன, ஜாஎல. - 0112247150/ 0112247160
6. பிரதேச சபைக் கட்டிடம், 3ம் மாடி, மிரிஸ்வத்த, முதுன்கொட. 033-2226602/ 033-2226802
7. கச்சேரி கட்டிடத் தொகுதி, 5ஆம் மாடி, களுத்துறை - 034-2223329

**கட்டணங்கள் கீழ்க்கானுமாறு அமையும்.**

- முச்சக்கரவண்டி பதிவுக் கட்டணம் - ரூ. 500.00
- வருடாந்த பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரக் கட்டணம் - ரூ. 1000.00
- சாரதி பதிவுக் கட்டணம் - ரூ 1500.00

ஒன்லைன் முறை ஊடாக பதிவுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை சமர்ப்பிப்போர் குறித்த கட்டணங்களை மக்கள் வங்கியின் பத்தரமுல்ல கிளையின் கணக்கு இல. 2081-001-9-0050225 இற்கு வரவு வைத்தல் வேண்டும் அத்துடன் காசு வரவு வைக்கும்போது கணக்கு உரிமையாளரின் பெயராக தலைவர், வீதிகளுக்கிடைலான பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மே.மா எனக் குறிப்பிடுதல் வேண்டும். வங்கி வைப்புப் பத்திரத்தில் கொடுப்பனவை மேற்கொள்பவரின் தகவல்கள் உள்ளடக்கும் போது முச்சக்கர வண்டி உரிமையாளரின் அடையாள அட்டை இலக்கம், கையடக்க தொலைபேசி இலக்கம், அல்லது முச்சக்கர வண்டியின் இலக்கத்தை கட்டாயமாக குறிப்பிடுதல் வேண்டும்.

2022 இல 06 வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து முச்சக்கரண்டி சேவை விதிகளின் மூலம் விதிக்கப்படும் விதி முறைகள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்டு பகிரங்கப் படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு மாற்றமாக மாகாணத்திற்குள் முச்சக்கர வண்டி மூலம் பயணிகள் போக்குவரத்துச் செய்தல் தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும்.

**ஓ. டபிள்யூ. பிரசன்ன சஞ்சீவ**
**தலைவர்,**
**மேல் மாகாண வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகார சபை**
**இல. 89, ரன்மகபாய, கடுவளை வீதி, பத்தரமுல்ல.**
**தொ.பே. 0112860860**
**2023.04.28**

# கேள்வி கோரல் அழைப்பு – மாவனல்லை பிரதேச சபை

ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள மானியங்களின் கீழ் மாவனல்லை பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வீதி அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்காக திறன் உடைய மற்றும் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**அட்டவணை:-**

| தொடர் இல. | வேலைகள் | ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பப்படிவ கட்டணம் ரூ. | தகைமை பெறும் ஒப்பந்த பதிவுத் தரம் | மதிப்பிடப்பட்ட வேலை பெறுமதி மில்லியன் |
|---|---|---|---|---|---|
| 01 | புதிய நீர் களஞ்சிய தாங்கிக்கான பிரவேச பாதையை மேம்படுத்துதல், கொட்டவத்த யூசுப் மாவத்த (0+000+0+302) கி.மீ. வரை | EE/KG/ WS/16/2022 | 5,000.00 | C5 மற்றும் அதற்கு மேல் | 13.53 |
| 02 | புதிய நீர் களஞ்சிய தாங்கிக்கான பிரவேச பாதையை மேம்படுத்துதல் உயன்வத்த, ரிட்டிகஹ கும்புற பாதை - (0+242 - 3 +310) கி.மீ. வரை | EE/KG/ WS/15/2022 | 2,500.00 | C6 மற்றும் அதற்கு மேல் | 3.51 |

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) ஊடாக இக் கேள்விகோரல் நடத்தப்படும்.
03. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தரத்தில் வீதி நிர்மாணத் துறையில் நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
04. சகல கேள்விதாரர்களுக்கும் குறித்த வீதியை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு அழைப்பு விடுப்பதுடன், 2023.04.28 முதல் 2023.05.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பாதையை பரீட்சித்துப் பார்க்க முடியும்.
05. ஆர்வம் காட்டுகின்ற திறன் உடைய கேள்விதாரர்களால் மேலதிக தகவல்களை மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.04.28 முதல் 2023.05.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்கண்டவாறு கட்டணத்தை செலுத்தி மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
06. கேள்விப் பிணைமுறி பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு சகல கேள்விதாரர்களும் மேற்படி கைத்தொழிலிற்கான கேள்விப் பிணைமுறியை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் அதன் சேவை பெறுநர் செயலாளர், மாவனல்லை பிரதேச சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை மாவனல்லை பிரதேச சபைக்கு பிரவேசித்து அல்லது தொ.பே. இல. 035-2246789 ஊடாக அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவைப்படுபவருக்கு இலவசமாக வாரத்தின் வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
08. பொறியிடப்பட்ட கேள்விகளை 2023.05.30 முற்பகல் 10.00 இற்கு அல்லது அதற்கு முன் செயலாளர், பிரதேச சபை, மாவனல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாவனல்லை பிரதேச சபையில் வைக்கப்பட்டுள்ள பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
09. 2023.05.30 முற்பகல் 10.30 இற்கு மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
10. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை மாவனல்லை பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சபை,**
**மாவனல்லை.**

**2023.04.28ம் திகதி**

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

**தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்**

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**

**IDA Credit No.: 6346 LK-P163742**

## தென் மாகாணத்தில் ஹம்பந்தொட்ட மாவட்டத்தில் பயிர்ச்செய்கை வேலிகளுக்காக (அகற்றக்கூடிய யானை வேலிகள்) பண்டங்களை கொள்வனவு செய்தல்

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து உலகவங்கி கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்கான தகுதியுள்ள பணக்கொடுப்பனவிற்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இலக்கம் | வேலையின் விளக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபாவில்) | இலங்கை ரூபாவில் விலைமனு பிணை பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| 01. | LK-MOA-293063-GO-RFB/SP/ DPSO/ C.Fence(54)/ 2022/15 | உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கீழ் தென் மாகாணத்தில் ஹம்பந்தொட்ட மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கான வேலிகளுக்கான (அகற்றக்கூடிய யானை வேலிகள்) பண்டங்களை கொள்வனவு செய்தல் | 7,500.00 | தொகுதி 1 பண்டகிரிய ஏஎஸ்சி பிரதேசத்திற்கான பொருட்கள் - 250,000 ரூபா. 2023 செப்டெம்பர் 3 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் |
| | | | | தொகுதி 2 யோதகண்டிய ஏஎஸ்சி பிரதேசத்திற்கான பொருட்கள் - 375,000 ரூபா. 2023 செப்டெம்பர் 3 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் |
| | | | | தொகுதி 3 வீரவில ஏஎஸ்சி பிரதேசத்திற்கான பொருட்கள் - 120,000 ரூபா. 2023 செப்டெம்பர் 3 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் |

3. விலைமனுக் கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை ஹம்பந்தொட்ட, நிருவாக கட்டிடத்தொகுதி, 3 ஆம் மாடி, செயற்றிட்ட பிரதி பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்ட செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 047-2256304. தொலைநகல் இல.: 047-2256303) 2023 மே 03 ஆம் திகதியிலிருந்து 2023 மே 23 ஆம் திகதிவரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. 2023 மே 03ஆம் திகதியிலிருந்து 2023 மே 23 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணிவரையும் ரொக்கப் பணத்தில் மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்காக மேலேயுள்ள அட்டவணையை தயவு செய்து பார்வையிடவும்) செலுத்திய பின்னர், தலைப்புக் கடித மூலப் பிரதியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.
7. மேலேயுள்ள 4 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இடத்தில் 2023 மே 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு முன்னர் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விஷேடமாக அளவுக்குறிப்பு ITB மற்றும் ஒப்பந்த தரவு ஆகியவற்றுடன் நன்றாக பரிச்சயத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள விதித்துரைக்கப்பட்டுள்ள உருமாதிரியில் அமைந்துள்ள நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனு உத்தரவாதத்துடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்துபக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்படமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.

   விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு முறையே ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதியென’’ அடையாளமிடப்படல் வேண்டும். இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொருதபாலுறையில் சேர்க்கப்பட்டு முத்திரையிடப்பட்டு பண்டங்களின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் எழுதப்படல் வேண்டும்.
10. 2023 மே 23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்), 3 ஆம் மாடி, நிருவாக கட்டிடத் தொகுதி, ஹம்பந்தொட்ட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
11. விலைமனுக்கள் 2023 மே 23 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். மேலே திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள விலைமனுக்களை மூடும் திகதியன்று அரசாங்க அறிவித்தலின் பிரகாரம் மூடப்படின், விலைமனுக்களை மூடும் திகதியானது உடனடியான அடுத்த வேலை நாளாகவிருக்கும் என்பதுடன் அவைகள் அதே நேரத்தில் மற்றும் இடத்தில் திறக்கப்படும்.
12. செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியும் முடிவுமாகும். செயற்றிட்ட பெறுகைக் குழுவானது தனியொரு, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் அதனது சுயவிருப்பத்தில் நிராகரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு (தென் மாகாணம்),**
**செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (தென் மாகாணம்),**
**3 ஆம் மாடி, நிருவாககட்டிடத் தொகுதி,**
**ஹம்பந்தொட்ட.**

திகதி: 2023.04.28.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்து இயல்புநிலையை ஏற்படுத்தும் நடைமுறைகள்...



## மக்கள் பொருளாதார மன்றத்தின் ஒருங்கமைப்பாளர் கஜேந்திரன் ரெஜினோல்ட்



**இலங்கையில் இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் பொது மக்கள் இயல்பு வாழ்க்கைக்கான புதிய நடைமுறைகளை எவ்வாறு கடைபிடிப்பது என்பது தொடர்பில் மக்கள் பொருளாதார மன்றத்தின் ஒருங்கமைப்பாளர் கஜேந்திரன் ரெஜினோல்ட் கூறும் அறிவுரைகள்....**

**கே: நீங்கள் மக்கள் பொருளாதார மன்றம் அமைப்பை ஸ்தா–பித்து நடவடிக்கை மேற்கொண்டு வருவது நாம் அறிவோம். அது தொடர்பாக கூற முடியுமா?**

இந்த அமைப்பு கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இயங்கி வருகின்றது. ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள மக்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடல்களைச் செய்கின்றோம். இயல்பு வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இந்த செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். நாம் எல்லோரும் நவீன கலாரசாரத்திற்குள் சிக்குப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆதலால் அதிகளவான மக்கள் நுகர்வுக் கலாசாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் பணம் கொடுத்துதான் ஒரு பொருளை வாங்க வேண்டும். எதாவது ஒன்றைச் செய்வதாக இருந்தாலும் பணத்தை மையமாகக் கொண்டே செயற்படுவதால் நாங்கள் பொருளாதார ரீதியில் பின் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

**கே: அதற்கான காரணங்கள் என்ன?**

குறிப்பாக ஆடம்பரமாக வாழ்வதென்பது வாழ்வல்ல. இருப்பதைக் கொண்டு மனத் திருப்தியோடு வாழ்வதுதான் நல்ல வாழ்க்கையாகும். இதுதான் சிறந்த வாழ்க்கை என்று மக்களுக்கு நாம் தெளிவுபடுத்தி வருகிறோம். தாம் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பதற்காக ஒரு மூன்று மாடிக் கட்டடத்தைக் கட்டுவதற்காக வங்கியில் கடன்களை வாங்குவார்கள். பின்பு வீட்டைக் கட்டி விட்டு சாகும் வரை கடனாளியாக இறந்து விடுவார்கள்.மூன்று மாடியைக் கட்டிக் கடனாளியாக இருப்பதை விட இயல்பாக ஒரு வசதியுடையவனாக இருக்கலாம். எல்லோரும் போல் வாழ்வதற்கான ஒரு சாதாரண வீடு இருந்தால் போதும். அதற்கு டைல்ஸ் பதிக்கத் தேவையில்லை. அதைப் பதித்துத் தான் வாழ வேண்டும் என்று இல்லை. இருப்பதைக் கொண்டு திருப்தியான முறையில் வாழ்வதையே இயல்பான வாழ்க்கை முறையாகும். இது வந்து சிக்கனமோ கஞ்சனத்தனமோ என்று இல்லை.

நாங்கள் பல வருடங்களை கடந்து வந்து விட்டோம். இயல்பான வாழ்க்கை முறைக்குள் இருப்பதுதான் எங்களுடைய வசதியான சுவாத்தியமான வாழ்க்கையாக அமையும் என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தி வருகின்றோம். அவர்கள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை சுட்டிக் காட்டி ஆலோசனைகளை முன் வைக்கின்றோம்.

பொது மக்களிடம் நேரடியாகச் சென்று எப்படி இயல்பு வாழ்க்கைக்குள் வாழலாம் என்று அவர்களுக்கு தெளிவூட்டல்களைச் செய்து வருகிறோம். பல வருடங்களை கடந்து வந்து விட்டோம். இயல்பு கலாசார வாழ்க்கையோடு வாழும் போது கஷ்டம் என்ற விடயமோ அல்லது வேறு ஒருவருடன் தங்கி நிற்க வேண்டும் என்ற அவசியமுமில்லை. சுய கௌரவத்தோடு வாழ்தல் என்பது தான் சிறப்பான வாழ்க்கையாகும்.



**கே: நீங்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கான எத்தகைய வழிகாட்டல்களை செய்து வருகின்–றீர்கள்?**

பொருளாதார ரீதியிலான பொறிமுறையிலான விடயங்களை நாங்கள் இதில் விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டி இருக்கிறது. காட்டுக்குள் வீடுகளை கட்டி இருப்பார்கள். ஆனால் எரி வாயு அடுப்பை பாவிப்பவர்களாய் இருப்பார்கள். இது எந்தளவு இயல்பு வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றால், சமுர்த்தி பெறும் ஒரு குடும்பம் ரூபா 2500 பெற்றுக் கொள்ளுவார்களாயின் எரிவாயு வாங்குவதற்கு 5150 ரூபா பணம் செலவு செய்கிறார்கள். சாதாரணமாக ரூபா 5000 என எடுத்துக் கொண்டால் வருடம் அல்லது 12 மாதத்திற்கு 60,000 ரூபா பணத்தை செலவு செய்கிறார்கள். இப்பணத்தை நெருப்புகுள் போடுகிறார்கள். இது எந்தளவு வீண். இது அவர்களுக்கு விளங்குவது இல்லை. 2500 ரூபா அரசாங்கம் தருகிறது. இன்னும் மேலதிகமாக 2500 ரூபாவை நெருப்புக்குள் போடுகிறார்கள் என்பதை விளங்குகிறார்கள் இல்லை. இப்படி கூட்டிப் பெருக்கி செலவு செய்கின்றீர்கள் எனச் சொல்லும் போதுதான் பொது மக்களுக்கு பெரியதொரு அதிர்ச்சியாக இருக்கிறது. அவர்கள் யோசிக்கிறார்கள். காலடியில் விறகு இருந்தும் விறகைப் பயன்படுத்தாமல் எரிவாயுக்கு பணத்தைக் கொடுத்து நாசம் பண்ணுறோம், இதுதான் உண்மை.





சாதாரணமாக சட்டி பானை கழுவதற்கு விம் சோப். கொயில் போன்றவை இல்லை என்றால் கழுவ முடியாது என்று கூறுகிறார்கள். குறிப்பிட்ட கால கட்டத்தில் தான் இவைகளுக்கு நாங்கள் மாறியிருக்கின்றோம். சாம்பலும் மணலையும் போட்டுத் தேய்த்தால் போய் விடும். அவைகள் எல்லாம் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்தவையே. ஒரு தடவை தண்ணீரால் கழுவினால் போகாது. சாப்பிடும் இடத்தில் சோப் விம் கட்டி லிக்குட் போன்றவைகள் இருக்கும். அதனுடைய நுரைகள் படிந்து இருக்கும். அவைகள் இலகுவில் போகாது. நாங்கள் உணவு உண்ணும் போது அவை எல்லாம் எமது வயிற்றுக்குள் தான் செல்கிறது. ஒன்று செலவு, இரண்டாவது எமது உடல் ஆரோக்கியமும் இல்லாமற் போகிறது. ஒரு கிழமைக்கு சாதாரணமாக ஒரு வீட்டிற்கு 400 ரூபாய் செலவு செய்கிறார்கள். சும்மா தண்ணீரில் கழுவி ஊத்தி விடுவதற்கு 400 ரூபாய் செலவு செய்கிறார்கள். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால் இந்த 400 ரூபா காசு தன் பிள்ளைகளுடைய படிப்புச் செலவை சமாளிப்பதற்கு அல்லது மிக அவசியமான ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கு உதவும். இப்படியான விடயங்களை பொது மக்களுக்கு தெளிவு படுத்தி வருகிறோம்.

இது பற்றி தெளிவு படுத்துகின்ற போது, பொது மக்கள் புதிய பொருளாதார திட்டத்திற்கு மாறியமையினால் இவ்வளவு காலமும் வீணாகச் செலவு செய்து விட்டோம் என்று எம்மிடம் வந்து முறையிடுகின்றார்கள். கவலைப்படுகின்றார்கள்.

நாங்கள் வீடு கட்டும் போது டையில்ஸ் பதிக்க வேண்டும் என்ற மன நிலை வந்து விட்டது. வசதியாக வாழ்வதற்கும் ஆரோக்கியத்திற்கும் டையில்ஸுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது.

ஒரு கூரைக்கு செலவு செய்யும் பணத்தை அப்படியே கொண்டு வந்து டையில்ஸ்களுக்குச் செலவு செய்கிறோம். வீடு கட்டியவர் பின்பு கடனாளியாகிறார். இயல்பு வாழ்க்கை என்பது டைல்ஸ் பதிப்பது என்பது இல்லை. அது அவசியம் இல்லை என்று சொல்ல வரவில்லை. அவருடைய வாழ்க்கைச் சூழலுக்கு இது இருந்தால் தான் நான் வசதியாக இருக்கிறேன் என்ற அபிப்பிராயம் இல்லை. அதைக் கடந்து நல்லா வாழ வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் சுட்டிக் காட்டி வருகின்றோம்.

**கே: நீங்கள் எவ்வாறான நடவடிக்–கைகளில் ஈடுபட்டு வருகின்–றீர்கள்?**

கடந்த 25 ஆம் திகதி நாங்கள் இயல்பு நிலையில் வாழும் குடும்பங்களை ஒன்று கூட்டி ஒரு கூட்டம் நடத்தினோம். இதில் வீட்டுத் தோட்டத்தை வருமானத்தை வைத்து தன் பிள்ளைகளை பல்கலைக்கழகம் வரையிலும் படிப்பிக்கின்ற குடும்பங்கள் இருக்கின்றனர். அவர்கள் யாரிடத்திலும் எதையும் எதிர்பார்க்காமல் இயல்பு வாழ்க்கையோடு வாழ்ந்து வரும் குடும்பங்கள். தங்களுடைய கையை நம்பி தங்களுடைய வாழ்க்கையை கொண்டு செல்லுபவர்கள்.

இவ்வாறான குடும்பங்களையும் சேர்த்து எங்களுடைய ஆலோசனைகளையும் கருத்திற் கொண்டு ஒரு குழுவாகச் சேர்த்து இயல்பு வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளுகின்ற விடயத்தை வலுவூட்டும் வகையில் கௌரவிப்பு ஒன்றை செய்தோம். எமது மக்கள் பொருளாதார மன்றம் குறிப்பாக முன்பு மக்கள் அனுபவித்த இயல்பு வாழ்க்கை முறையின் பக்கம் மக்களை ஈர்க்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

இது ஒரு சாதாரண விடயமாக இருந்தாலும் எமது நாட்டின் பொருளாதார விடயத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தொன்று. ஒவ்வொரு குடும்பங்களும் சேர்ந்ததுதான் ஒரு நாடு. ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று மாற்றங்களை ஏற்படுத்தும் போது இது நாடு தழுவிய ஒரு மாற்றமாக வரும். ஒரு கிராமத்தில் விறகு பாவிக்கக் கூடியவர்கள் 150 பேர் எரி வாயு பாவிப்பவர்களாக இருந்தால் இதனை நாங்கள் வெளிநாடுகளில் இருந்து தானே இறக்குமதி செய்ய வேண்டும். மின்சாரத்தை எவ்வாறு சிக்கனமாக பாவிக்கலாம் என்ற ஆலோசனைகளையும் முன்வைத்து வருகின்றோம். வீட்டில் தேங்காய்ப் பால் ஒரு கோப்பை மிஞ்சி விட்டால் அதைக் கொண்டு போய் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விடுவோம். குளிர்சாதனப் பெட்டி மின்சாரத்தில் இயங்கும். அப்பொருளை குளிர்சாதனப் பெட்டியில் இருந்து வெளியே எடுக்கும் போது மின்சாரம் மின் அலகு ஒரு நாள் முழுக்க ஓடியிருக்கும். அதற்கு ஆறு தேங்காய் வாங்கி விடலாம். இன்றுள்ள நிலைமை இதுதான். அதற்கான வழிகாட்டல் நமக்கு இல்லை.

தண்ணீர் வீண் விரயம் செய்வதாலே அடிக்கடி மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. இரவில் மின்சாரம் பாவனை செய்வதால் மின் அலகுக் கட்டணம் குறைவாக அறவிடப்படுவதாக அறிகின்றோம். இப்படியான கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதற்காகத்தான் மக்கள் பொருளாதார மன்றம் என்ற அமைப்பை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம்.

**கே: இதன் மூலம் மக்கள் பயன் அடைந்துள்ளார்களா?**

நாங்கள் இறுதியாக பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினோம். அதற்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர். எங்களுடைய தெளிவூட்டலைக் கேட்டு சில விடயங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்று அக் கூட்டத்தின் போது மக்கள் கருத்தினைத் தெரிவித்தார்கள். தோட்டத்தில் தண்ணீர் இறைப்பதாக இருந்தால் இரவு வேளைகளிலே இறைத்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இரவு 10.00 மணிக்குப் பிறகுதான் தோட்டத்திற்கு தண்ணீர் இறைக்கின்றார்கள். இரவில் பாவனைகளை மேற்கொள்வதால் மின்சாரக் கட்டணத்தை குறைக்கக் கூடியதாக இருக்கிறது. உடைகளை அயன் பண்ணும் போது முதல் மகள் அயன் பண்ணுவார். அடுத்து மகன் வந்து அயன் பண்ணுவார். இப்படி ஒவ்வொருவராக வந்து அயன் பண்ணுவார்கள். இரவு 10.00 மணிக்கு அயன் பண்ண வேண்டும். அப்பொழுது வீட்டில் பிள்ளைகள் படிப்பதாக இருந்தால் இன்னும் கொஞ்சம் நேரம் விழித்து இருந்து படிப்பார்கள். அதிலும் நன்மை இருக்கிறது.

நாங்கள் கொடுத்த அறிவுறுத்தலின்படி மின்சாரப் பாவனை செய்யும் விடயத்தை இரவுக்கு மாற்றியிருக்கிறோம். வீட்டுத் தோட்டங்களை ஆரம்பித்துள்ளார்கள். ஆடம்பர செலவு எது? அத்தியாவசியமான செலவு எது? ஆடம்பரமற்ற செலவு எது? என்பதை அவர்களே சுயமாகக் கண்டுபிடித்துச் செயற்படுகின்றார்கள்.

வீட்டில் மோட்டார் சைக்கிள் ஒன்று இருக்கும். எங்கேயாவது சரி பணம் வந்து விட்டால் இன்னுமொரு மோட்டார் சைக்கிளை வாங்குவர். இவை எல்லாம் நமக்கு அவசியமில்லாத செலவுகள் என்று மக்கள் கண்டு பிடிக்கின்றார்கள். இது நமக்கும் தேவையில்லை என்று தெளிவான முடிவுகளை எடுக்கின்றார்கள். இவ்வளவு காலமும் செய்து வந்த செலவை அவசியமற்றது என்று அவர்கள் கண்டு பிடிக்கக் கூடிய ஆற்றல் இருக்கிறது. இது அவசியமானது இது அவசியமற்றது. இது இப்ப தேவையில்லை. கொஞ்ச நாளைக்குத் தள்ளிப் போடலாம். இவ்வாறான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கின்றது. மக்கள் மத்தியில் ஒரு முன்னேற்றத்தைக் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அக்கரையான், கோளாவில். கந்தபுரம், ரத்தினபுரம் ஆகிய இடங்களில் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இதனை கிளிநொச்சி மாவட்ட முழுவதும் மேற்கொள்வதுதான் எங்களுடைய நோக்கம்.

நாங்கள் கௌரவிப்புத் திட்டத்தை நடத்தக் காரணம். எங்களோடு தொடர்பு பட்டவர்களை அழைத்து மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வூட்டலைச் செய்து இயல்பு வாழ்க்கை முறைக்கு ஒவ்வொரு குடும்பங்களையும் கொண்டு வருவதற்காகவே இந்த கௌரவங்களையும் பாராட்டுக்களையும் வழங்கி ஒரு முன்னேற்றத்தையும் பயனையும் கண்டு இருக்கின்றோம் என்று கூறலாம்.

**கே: உங்கள் முயற்சிகளுக்கு காவேரிக் கலா மன்றத்தின் பங்களிப்பு?**

இந்த வேலைத் திட்டம் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வணபிதா யோசுவா அடிகளாரின் எண்ணக் கருவுக்கு ஏற்ப முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு வேலைத் திட்டமாகும். பொது மக்களுக்கான ஒரு விழிப்புணர்வூட்டலைச் செய்ய வேண்டுமாயின் அக் கூட்டத்தை ஆயத்தப்படுவதற்கான சகல தேவைகளையும் நிறைவேற்றித்தருகிறார்கள். குறிப்பாக அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள், கலந்து கொள்வோர்களுக்குத் தேவையான உணவு போன்றவற்றை காவேரிக் கலா மன்றமே வழங்கி வருகின்றது. இதற்கு முற்று முழுதான உதவியை அந்த அமைப்புத் தான் செய்கின்றது. கடந்த முறை இலங்கை வங்கிக்குப் பின்னால் படைவீரர்களின் சன சமூக ஒத்துழைப்பு மையம் ஒன்று இருக்கிறது. அவர்கள் மண்டபத்தைத் தந்துதவினார்கள். அது திறந்த மண்டபம். அவர்கள் எங்களிடம் எந்த பண அறவீடும் செய்ய வில்லை. இலவசமாகத் தந்தார்கள்.

இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஆலோசனையைத் தந்தவர் வணபிதா யோசுவா அடிகளார் ஆவார்.வணபிதா யோசுவா அவர்களுடைய எண்ணக் கருக்களின் வெளிப்பாடுதான் இது

ஒரு வீட்டுத் தோட்டத்தை செய்வது என்றால் எப்படிச் செய்ய வேண்டும். காளான் செய்கை, தேனி வளர்ப்பு போன்றவற்றை எப்படிப் பண்ண வேண்டும் என்பது பற்றி தெளிவூட்டல்கள் வழங்குவதோடு மட்டுமல்ல அதற்குத் தேவையான பயிற்சிகளையும் வளங்களையும் பெற்றுக் கொடுக்கவுள்ளோம். ஒரு தாய் வீட்டுத் தோட்டச் செய்கை பண்ணிக் கொண்டு தன் பொருளாதார தேவையை நிறைவு செய்வதற்கான வழிகாட்டல்களை மெல்ல மெல்ல நகர்த்தி வருகின்றோம். தானாகவே தங்களது பொருளாதாரத்தை வீட்டில் இருந்தவாறு வலுப்படுத்திக் கொள்ள முடியும். கிளிநொச்சி மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டுமல்ல அவர்களுடைய பொருளாதாரத்தை பாதுகாத்தல் நடவடிக்கைகளிலும் இவ்வமைப்பு ஈடுபட்டு வருகிறது என்று கூறலாம்.

உடல் ரீதியிலான சுகாதார தேவை எனக் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய அதிகாரிகளை தொடர்பு படுத்தி கொடுக்கின்ற பணிகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு பல பணிகள் உள்ளன.

**இக்பால் அலி...**





# ‘சுய சவால்’ கொடுக்கும் ஆடுகளத்தில் அயர்லாந்தை வென்ற இலங்கை அணி



அயர்லாந் து டனான டெஸ்ட் தொடரில் இலங்கை அணிக்கு சவால் கொடுக்கும் வகையிலேயே ஆடுகள ம் தயாரிக்கப்பட்டதாக இல ங்கை தேர்வுக் குழு தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க மற்றும் அணித் தலைவர் திமுத் கருணா ரத்ன உறுதி செய்துள்ளார்.

காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற இந்த டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2–0 என முழுமையாக கைப்பற்றியபோதும் இரண்டாவது போட்டியில் அயர்லாந்து அணி துடுப்பாட்டத்தில் சோபித்தது. முதல் இன்னிங்ஸில் அந்த அணி 492 ஓட்டங்களை பெற்றதோடு ஆட்டம் கடைசி நாள் வரை நீடித்தது.

‘சிறந்த ஆடுகளம் ஒன்றை நாம் கோரினோம்’ என்று விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

‘சிறந்த ஆடுகளம் ஒன்றில் எமது பந்துவீச்சாளர்களின் திறமைக்கு சவால் விடுக்க நாம் எதிர்பார்த்தோம். வெளிநாட்டில் நாம் டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற வேண்டுமாயின், எமக்கு வசதியான சூழலில் இருந்து வெளியேறி நாமே நமக்கு சவாலான சூழலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதனையே நாம் செய்தோம்’ என்றும் அவர் தெரிவித்தார்.

முதல் இன்னிங்ஸில் அயர்லாந்து 145.3 ஓவர்கள் துடுப்பெடுத்தாடியதோடு இலங்கை பந்துவீச்சாளர்கள் விக்கெட் வீழ்த்த தடுமாறினர். முதல் போட்டி போலன்று இரண்டாவது நாளிலும் ஆடுகளம் போதுமாக சுழன்றதோடு பந்து மேலெழுந்தது. அயர்லாந்தின் மோசமான பந்துவீச்சின் உதவியோடு முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டை மாத்திரம் இழந்து 704 ஓட்டங்களை பெற்ற இலங்கை 212 ஓட்டங்களால் முன்னிலையை பெற்று அயர்லாந்தை இரண்டாவது இன்னிங்ஸில் 202 ஓட்டங்களுக்கே சுருட்டியது.

அணித் தலைவர் திமுத் கருணாரத்னவும் போட்டிக்குப் பின்னர் ஆடுகளத்தை பாராட்டினார். ‘இவ்வாறான ஆடுகளமே எமக்குத் தேவை. பந்துவீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்களுக்கு மாத்திரம் உதவும் ஆடுகளம் எமக்குத் தேவையில்லை. பந்துவீச்சாளர் மற்றும் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கக் கூடிய சிறந்த ஆடுகளமாக இருக்க வேண்டும்’ என்று கருணாரத்ன குறிப்பிட்டார்.




# ஈஸ்டன் ரைடர்ஸ் சம்பியன்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

பொத்துவில் மிஹ்ராஹ் விளையாட்டு கழகம் நடாத்திய எஸ்.என்.ஏ. ஞாபகார்த்த இரவு நேர மின்னொளி மென்பந்து கிரிக்கெட் தொடரில் சம்பியனாக பொத்துவில் “ஈஸ்டன் ரைடர்ஸ்” அணி வெற்றியீட்டியது.

அண்மையில் பொத்துவில் ஜலால்தீன் சதுக்க மைதானத்தில் நடைபெற்ற நாற்பது அணிகள் பங்கு கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில், ஈஸ்டன் ரைடர்ஸ் அணியும் வொன்ரோஸ் அணியும் மோதின.

இதில் ஐந்து ஓவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 33 ஓட்ட வெற்றி இலக்கை ஈஸ்டன் ரைடர்ஸ் 3.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து எட்டியது.

இத்தொடரின் சிறப்பாட்டக்காராக வொன்ரோஸ் அணியின் முஹம்மது கியாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# மலையக கல்வி அபிவிருத்தி மன்ற விளையாட்டு விழா

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தினால் 9ஆவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மே தின மற்றும் தமிழ், சிங்கள புத்தாண்டு விளையாட்டு விழாபுறக்கோட்டை, செட்டித் தெருவில் இன்று (01) நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான 8 கிலோ மீற்றர் வீதி ஓட்டப் போட்டி இன்று காலை 7.00 மணிக்கு செட்டியார் தெரு சந்திக்கு முன்பாக ஆரம்பிக்கப்படும். ஆண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகள், சிறுவர்கள் மற்றும் இளையோருக்கான மேலும் பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

விளையாட்டு விழாவுக்கான பரிசளிப்பு வைபவத்தில் முன்னாள் ஒலிம்பிக் வீராங்கனையும் பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டி ஓட்டப் போட்டியில் சர்வதேச அளவில் 20க்கும் மெற்பட்ட பதக்கங்களை வென்றுள்ளவருமான சிறியானி குலவன்ச பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.



அட்டாளைச்சேனை கல்விக் கோட்டமட்ட 16 வயதுப் பிரிவுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (27) நடைபெற்றது. இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய அணி சம்பியனாகி அக்கரைப்பற்று வலய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதிபர் எம்.ஏ. அன்சார் உட்பட வீரர்ளைப் படத்தில் காணலாம். *(படம்: ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)*

# இலங்கை மகளிரின் முதல் போட்டிக்கு மழை இடையூறு



இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டது.

கொழும்பு பீ. சரா மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (29) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 36.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களை பெற்ற நிலையில் மழை குறிக்கிட்டது.

தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டத்தை தொடர முடியாமல்போனது.

இதன்போது துடுப்பாட்டத்தில் சோபித்த இலங்கை அணித் தலைவி சாமரி அத்தபத்து 37 பந்துகளில் 8 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 47 ஓட்டங்களை பெற்றார். கவிஷ டில்ஹாரி அட்டமிழக்காது 30 ஓட்டங்களை பெற்றார்.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இதே பீ. சரா அரங்கில் நாளை (02) நடைபெறவுள்ளது.

# ஆசிய இளையோர் மெய்வல்லுனர்: இலங்கைக்கு மேலும் இரு பதக்கம்





உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற 5ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது நாளான கடந்த சனிக்கிழமை (29) இலங்கைக்காக மேலும் இரண்டு பதக்கங்களை நிலுபுல் பெஹசர மற்றும் கசுனி நிர்மலி ஆகியோர் வென்றனர்.

ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் பங்குகொண்ட திக்வெல்ல விஜித மத்திய கல்லூரியைச் சேர்ந்த நிலுபுல் பெஹசர 2.01 மீற்றர் உயரத்தை தாவி வெள்ளிப் பதக்கம் வென்றார். அத்துடன் அதே போட்டியில் பங்கு கொண்ட லெசந்து அர்த்தவிது 1.90 மீற்றர் உயரத்தை தாவி ஐந்தாவது இடத்தைப் பெற்றார்.

இறுதியாக கடந்த ஆண்டு குவைட்டில் நடைபெற்ற நான்காவது இளையோர் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் பதக்கம் வென்ற லெசந்துவுக்கு இம்முறை பதக்கம் வெல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

பெண்களுக்கான 800 மீற்றர் போட்டியில் கம்பளை விக்ரமபாகு தேசிய பாடசாலையைச் சேர்ந்த கசுனி நிர்மலி விக்ரமசிங்க வெண்கலப் பதக்கம் வென்றார். போட்டியை நிறைவுசெய்ய அவர் 2 நிமிடங்கள் 17.04 விநாடிகளை எடுத்துக் கொண்டார். காலில் ஏற்பட்ட உபாதையுடனேயே அவர் இந்தப் போட்டியில் ஓடினார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் பெண்ணுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்று அவர் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் துஷேன் சில்வா வெள்ளிப் பதக்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோல்டன் பிரதர்ஸ் வெற்றி



**திறப்பனை தினகரன் நிருபர்**

நோன்பு பெருநாளை முன்னிட்டு நாச்சியாதீவில் ஏற்பாடு செய்யப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் நாச்சியாதீவு கோல்டன் பிரதர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற இந்தப் போட்டியில் ஐந்து அணிகள் பங்கேற்றன. இதன் இறுதிப் போட்டியில் கோல்டன் பிரதர்ஸ் அணியுடன் நொச்சியாகம நாஸா விளையாட்டு கழகம் பலப்பரீட்சை நடத்தியது. பரபரப்பாக நடந்த போட்டியின் முழு நேர முடிவில் இரு அணிகளும் கோல் பெறாத நிலையில் முடிவை தீர்மானிக்கும் பெனால்டி சூட் அவுட்டில் கோல்டன் பிரதர்ஸ் அணி வெற்றியை உறுதி செய்யதது.

# சூடான் மோதலால் பல்லாயிரம் மக்கள் சவூதியில் அடைக்கலம்



சூடானில் போட்டி இராணுவத்திற்கு இடையிலான மோதல் மூன்றாவது வாரத்தை எட்டி இருக்கும் நிலையில் மேலும் நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்கள் சவூதி அரேபியாவின் துறைமுக நகரான ஜித்தாவை அடைந்திருப்பதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சூடான் துறைமுகத்தில் இருந்து செங்கடலைக் கடந்து சுமார் 1900 பேரை ஏற்றிய கப்பல் ஒன்று ஜித்தாவில் உள்ள சவூதி கடற்படை தளத்தை அடைந்துள்ளது. இதில் போரில் தப்பிய 65 ஈரான் நாட்டு பிரஜைகளும் உள்ளனர்.

முன்னதாக சீனர்கள், பாகிஸ்தானியர்கள் சுமார் 500 பேரைச் சீன இராணுவக் கப்பல் ஒன்று ஜித்தாவிற்கு ஏற்றிச்சென்றது. அந்தப் பயணம் சுமார் 12 மணி நேரம் நீடித்தது. 70க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஜித்தாவுக்குப் போயிருப்பதாகத் தெரியவந்துள்ளது. அபாயத்தைப் பொருட்படுத்தாமல் பல்லாயிரம் பேர் சூடானிலிருந்து வெளியேறவோ அந்த நாட்டின் மற்ற பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லவோ முயல்கின்றனர்.

சூடான் தலைநகர் கார்டூமின் இராணுவத் தலைமையகம் மற்றும் ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் கடந்த சனிக்கிழமையும் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

சூடான் இராணுவம் மற்றும் பலம்மிக்க துணைப்படைக்கு இடையே கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி வெடித்த இந்த மோதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 528 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 4,599 பேர் காயமடைந்திருப்பதாக சூடான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

### 550 குழந்தைகளுக்கு தந்தை:

# விந்து தானத்தை நிறுத்த ஆடவருக்குக் கட்டுப்பாடு



விந்து தானம் மூலம் உலகெங்கும் 550 குழந்தைகளுக்கு தந்தையானதாக சந்தேகிக்கப்படும் நெதர்லாந்து ஆடவருக்கு அந்த செயலை நிறுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜொனதன் என்ற 41 வயதான அந்த ஆடவர் மீண்டும் விந்து தானத்தில் ஈடுபட்டால் 88,000 யூரோ அபராதத்தை எதிர்கொள்ள வேண்டி வரும். அந்த ஆடவர் 100 குழந்தைகளுக்கு மேல் தந்தையானது கண்டறியப்பட்டதை அடுத்து 2017ஆம் ஆண்டு நெதர்லாந்தில் கருவுறுதல் மருத்துவமனைகளுக்கு விந்து தானம் செய்வதற்கு தடை செய்யப்பட்டார். எனினும் அவர் ஒன்லைன் வழியாகவும் வெளிநாடுகளுக்கும் தொடர்ந்து விந்து தானம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் விந்து தானம் செய்திருக்கும் அனைத்து மருத்துவமனைகளின் விபரங்களை தரும்படியும் கையிருப்பில் உள்ள அவரது விந்துகளை அழிக்கும்படியும் ஹேக் நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அந்த ஆடவர் நூற்றுக்கணக்கான பெண்களை தவறாக வழிநடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நெதர்லாந்து மருத்துவமனை வழிகாட்டலில், விந்து தானம் வழங்குவோர் 12 குடும்பங்களில் 25 க்கு மேற்படாத தடவைகளே தந்தையாக முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உடன்பிறந்தவர்களிடையே திருமண உறவுகளை தவிர்க்கும் வகையிலேயே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் ஒரே வீட்டில் ஐந்து பேர் சுட்டுக் கொலை



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் அண்டை வீட்டார் துப்பாக்கியால் சுட்டு பயிற்சி மேற்கொண்டதால் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து ஒரே வீட்டில் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் கொல்லப்பட்டிருக்கும் அனைவரும் ஹொன்டுராஸ் நாட்டில் இருந்து வந்தவர்கள் என்பதோடு கொல்லப்பட்டவர்களில் எட்டு வயது சிறுமியும் அடங்குவார்.

களவலாண்டின் சிறு நகர் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை (28) இரவு இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது. இதில் கொல்லப்பட்ட இரு பெண்கள் உயிர் தப்பிய இரு சிறுவர்களின் மேல் அவர்களை பாதுகாக்கும் வகையில் படுத்தவாறு இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட அனைவரும் படுகொலை செய்யும் நடவடிக்கையாக தலையில் சுடப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது அந்த வீட்டில் இருந்தவர்கள் குழந்தையைத் தூங்க வைத்துக்கொண்டிருந்தனர். அப்போது அண்டை வீட்டு ஆடவர் வீட்டின் கொல்லைப்புறத்தில் ஆர்.யு 15 ரக துப்பாக்கியை வைத்து சுட்டுக்கொண்டிருந்தார்.

துப்பாக்கியால் சுடுவதை நிறுத்துமாறு அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் ஆடவரைக் கேட்டுள்ளனர். இதனை அடுத்தே வாக்குவாதம் வெடித்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய ஆடவர் மெக்சிகோ நாட்டைச் சேர்ந்தவர் என்றும் அவர் தலைமறைவாகி இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மே மாதம் 1ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.